481

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



OFFICE OF THE REGISTRAR
27 APR 1937
MADRAS

## சாந்தகுமாரி

(முடிவு)

14. அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும்
15. ப்ரேமையின் ஜோதி—பைசாசத்தின் அநீதி
16. குற்றமறிந்த வனிதை—முற்றும் வியக்கும் சரிதை
17. அண்ணனின் கொடுமை—அணங்கின் முடிவு
18. இதயத் திறப்பு—இன்ப அணைப்பு
19. ஞானோதயப் பூரிப்பு—ஆனந்தக் களிப்பு

இதர முக்கிய அம்சங்கள்

வனிதா விலாசம் ... "சூடாமணி"
டாக்கி விமர்சனம் ... "ராஜாமணி"
கவிதா மண்டலம் ... ஸ்ரீ வீரராகவ கவி
மெரினா பேச்சு ... "வழிப்போக்கன்"
காங்கிரஸும் மந்திரிப் பதவியும்—M. C. S.
உதிர்ந்த மணிகள் ... செய்திக் குறிப்புகள்
முதலியன.

JL
M211 M22JM
N37.14.4
18300

ஏப்ரல் 1937 சாந்தகுமாரி அணு 2

நீங்கள் வெகு நாட்களாய் எதிர்பார்த்த விருந்து !

தமிழுலகமெலாம் புகழ்பெற்ற நாவல்மணியின் நவீனம் !

நக்ஷத்திர நடிகர்கள் ஒருங்கே ஜொலிக்கும் படம் !

ஒப்பிலா டைரக்ஷன் ! மகத்தான சமூகப் படம் !

உங்கள் ஆசிரியை

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களின்

"ஜகன்மோகினியில்" சென்ற வருடம் வெளிவந்த

# ராஜமோஹன்

உயரிய நடிக திலகமென புகழ்பெற்ற ஸ்ரீமான் K. P. கேசவன்,

ஹாஸ்யரத்ன "சுவாமிகாள்" ஸ்ரீமான் காளி. N. ரத்தினம்,

உங்கள் பூரண அபிமானத்தைப்பெற்ற ஸ்ரீமான் K. K. பெருமாள்,

சோகரஸ நக்ஷத்திர நடி மிஸ். M. M. ராதாபாய்,

சங்கீதச் சிறுவன் சுக சாரீர மாஸ்டர் V. C. L. கிருஷ்ணன்,

இன்னும்

உங்களுக்கு மிகவும் பிரியமான கதாநாயகி

?

முதலிய சிறந்த நடிகர்கள் ஒருங்கே சேர்ந்து அளிக்கும்

நிகரில்லா விருந்து !

இந்திய படக்கலையில் வெற்றிக்கொடி நாட்டிய பிரபல டைரெக்டர்

?

---

நேஷனல் மூவிடோன் கம்பெனி

லிமிடெட்,

சென்னை.

Studio: Tel. 4094
71, Poonamallee Road,
Kilpauk.

Telegram:
"Movietone"

Office: 4093
55, Armenian St.,
George Town.

OFFICE OF THE REGISTRAR
27 APR 1937
MADRAS

ஸ்ரீ :

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 14 | தாது ௵ பங்குனி ௴ April 1937. | இதழ் 4 |
| --- | --- | --- |


அண்டங்கள் முற்று முனைத் தண்டனிட்டுப் போற்றும்
அமலனே ஆயர் கோனே!
அஞ்சாத நெஞ்சுடைய வஞ்சியாம் பூதனையை
அலறிடச் செய்த கோனே!
எண்டிசையும் இடியோங்கி இருளுடன் பெய்த அவ்
விரவு மழை தடுத்த கோனே!
இன்பமுடன் தனைச்சார்ந்த கோபாலருக்கு முனம்
இருபாதம் தந்த கோனே!
மண்டலம் புகழ்வனிதை மன்னவர்சபைதனில்
வருந்திடக் காத்த கோனே!
வறுமையால் துயருற்ற மாசறுசுதாமனின்
மனமகிழச் செய்த கோனே!
தண்டுளவ ஹாரமோடு தனஞ்சயன் தேரினில்
சாரத்யம் செய்த கோனே!
தங்குபுகழ் திருவல்லிக் கேணிதனில் மேவியருள்
சாரதீ-சரணம் கோனே!

வை. மு. கோ.

# காங்கிரஸும் மந்திரிப் பதவியும்

ஸ்ரீ. M. C. ஸ்ரீநிவாஸன் M. A., B. L.

பல மாதங்களாக விவாதிக்கப்பட்டும், போராடப்பட்டும், அபிப்பிராய பேதத்தால் ஒரு தீரமான முடிவுக்கு வராமலிருந்த பதவி ஏற்புப் பிரச்னை காங்கிரஸ் தலைவர்களால் ஒரு விதமான முடிவிற்கு வந்திருப்பது இந்திய தேசீய சரித்திரத்தில் பெரிய சம்பவம் என்றே சொல்ல வேண்டும். காங்கிரஸ் கக்ஷி பதவி ஏற்கலாம் என்ற தீர்மானம் சரியா, சரியில்லையா வென்ற கேள்விக்கு வருங் கால சம்பவங்களே பதிலளிக்கும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நமக்களிக்கப்பட்ட 1935-ம் வருட இந்தியா சட்டத்தைக் கண்டிக்காத இந்திய தலைவர்களு மில்லை; பிரமுகர்களுமில்லை. காங்கிரஸ் சொல்லுவதுபோல "உடைத்து விடுவோம்; புதைத்து விடுவோம்'' என்று சொல்லா விட்டாலும், அபார மிதவாதிகளும், அன்னிய அரசாங்கத்தையே கதியென்று நம்பியிருக்கும் சிலரும் தவிர மற்ற அனைவரும் நமக்குத் தற்சமயம் கிடைத்திருக்கும் அரசியல் மசோதாவைக் கேவலமானது என்றே ஒப்புக் கொள்ளுகிறார்கள். சுய மரியாதையுள்ள ஒரு இந்தியனாகிலும் இந்த அடிமை சாஸனத்தை ஆமோதிக்க மாட்டான்.

அங்ஙனமுள்ள மசோதாவைப் பொருட்படுத்தி அதில் கண்ட ஷரத்துக்களுக்கு உடன்பட்டு அரசாங்கம் நடத்தும் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டிய மந்திரி பதவிகளை, தேச விடுதலையையும் அதனால் ஏழ்மைத்தனத்தைப் போக்கப் பாடுபட வேண்டுமென்ற கொள்கைகளையும் மூலாதாரமாகக் கொண்ட தேச சபை ஒத்துக்கொள்ள தீர்மானித்திருப்பது அசம்பாவிதமான தீர்மானம் என்று அபேதவாதக் கக்ஷியார் அபிப்பிராயப்படுகிறார்கள்; ஆனால், அபேதவாத தத்வத்தை நன்றாக ஆராய்ச்சி செய்தவரும், ருஷியாவில் நடந்த புரட்சி இயக்கங்களில் கலந்து அதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் விரோதத்திற்கு ஆட்பட்டவரான ஸ்ரீ. எம். என். ராய் காங்கிரஸ் பதவி ஏற்பதை முரட்டுத்தனமாக எதிர்க்கவில்லை. ஸ்ரீ. ஜவஹர்லாலும் அங்கத்தினர்கள் பெரும்பாலோர் எப்படி முடிவு செய்கிறார்களோ அதை நடத்தத் தயார் என்றும், தான் மிகவும் வணக்கமான யுத்த வீரன் என்றும் சொல்லிவிட்டார் இதனால், காங்கிரஸ் மந்திரி ஸபை அமைக்கப்படுவது நிச்சயம் என்றுதான் சொல்லவேண்டும்.

சாதாரணமாக ஆறு மாகாணங்களில் தற்சமயம் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுத்த முடியும். மந்திரிப் பதவியேற்ற காங்கிரஸ் என்ன செய்யமுடியும்? எல்லாவற்றிலும் முக்யமானது, காங்கிரஸ் தனது பலத்தை அதிகப்படுத்திக்கொள்வதுதான். சில்லரை விஷயங்களைக் கவனிப்பதில் பொழுதைச் செலுத்திவிட்டால், காங்கிரஸின்

முக்கிய கொள்கையான பூர்ண சுதந்திரம் துருபிடித்த கத்தி மாதிரியாகிவிடும். பிரிட்டிஷ் அரசாங்கமே, நல்ல மனது கொண்டால் கட்குடியையொழிக்க ஏற்பாடுகள் செய்யலாம்; கிராமங்களைச் சீர்ப்படுத்தி அழகு படுத்தலாம்: நிலவரியைக் குறைக்கலாம்; உப்பு வரியை எடுத்துவிடலாம்; சமூகச் சீர்திருத்தங்களுக்குத் தடைசெய்யாமலிருப்பதுடன் சட்டங்களைக் கொணர்ந்து துரிதப்படுத்தலாம். இவைகளைச் செய்வதால் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் குறைந்துவிடாது. “இந்தியாவுக்கு இந்தியர்கள்தான் எஜமானர்கள்; அன்னியர்களுக்கிங்கு வேலைகிடையாது; எங்கள் டாஜ்மஹாலையும், ஹிமயமலையையும், அஜந்தா எல்லோரா குகைகளையும், தென்னிந்திய கோயில்களையும் வேடிக்கை பார்க்க வந்துவிட்டு திரும்பிச் செல்லுங்கள்'' என்று சொன்னால்தான் வந்துவிடும் கேடு. அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தாங்களாக ஒருகாலும் இணங்காது. அது இயற்கையே. இந்தியா இந்தியர்களுக்குத் திரும்பி வரவேண்டுமானால் அதற்கென்று போர்தான் புரியவேண்டும். நம்மிடம் கத்தி யில்லை; ஆயுதமில்லை. ஆகாயக் கப்பல்களில்லை. சைன்யமில்லை. நாம் அஹிம்ஸா விரதம் பூண்டவர்கள். ஆத்ம சக்தியும் விடாமுயற்சியும்தான் இக்காரியத்தைச் சாதிக்க வேண்டும். அதற்கு காங்கிரஸின் எண்ணங்களும், நோக்கங்களும் நாடெங்கும் நன்கு அறிவதே அவச்யம்.

காங்கிரஸ் மந்திரிகள் ஜனங்களின் கஷ்டங்களை மறக்கக்கூடாது. கவர்னரின் மனதை புண்படுத்தப் பயந்து ஏழை ஜனங்கள் காங்கிரஸ்பால் வைத்திருக்கும் அன்பையும், நம்பிக்கையையும் போக்கடித்துக் கொள்ளும்படியான காரியம் ஒன்றும் செய்யக்கூடாது. இதனாலேதான் காங்கிரஸிலேயே பல வருடங்களிருந்து உழைத்து, அடிபட்டு, பாடுபட்டுச் சேவையொன்றையே முக்கிய கருத்தாகக் கொண்டு, சுய நலத்தை மறந்திருக்கும் மனிதர்கள் மந்திரிபதவி ஏற்பது நன்மை என்பது பொதுஜன அபிப்பிராயம். முதலில், திருப்தியில்லாத மனிதனைச் சேர்த்துக்கொண்டு, பின்பு அவன் துரோகம் செய்ய ஆரம்பித்தபின் வருந்துவதில் பிரயோஜனமில்லை. ஒருவன் உண்மையாக மாறினானா, பதவியின் பொருட்டு மாறினானாவென்று பரீக்ஷை செய்ய இது சமயமில்லை. கேவலம் புத்தி சாதுர்யமும், பணமூட்டையும் அன்னிய அரசாங்கத்தைப் பயப்படுத்தாது. அவர்கள் நம்மைக்காட்டிலும் புத்திசாலிகள், பணக்காரர்களென்பதை அறியவேண்டும். தியாகம் செய்யத் தயாராயுள்ளவர்கள்தான் அரிய பெரிய காரியங்கள் சாதிக்க முடியும். அவர்கள் மந்திரிப் பதவிகளை ஏற்று நாட்டிற்கு நலனுண்டாக்குவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

# டாக்கி விமர்சனம் :: சதி அஹல்யா

## " ராஜாமணி "

சேலம் மாடர்ன் டாக்கீஸார் 'சதி அஹல்யா'வைப்பற்றிக் காங்கிரஸ் வெற்றிக்கு மேற்பட்டதாக விளம்பரப்படுத்தியிருந்ததைப் படித்தவர்களுக்குத் தாங்கள் எதிர் பார்த்த அளவுக்குப் படம் இல்லாதது ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும்.

மாடர்ன் என்கிற பதத்திற் கேற்ப இயற்கைக் காட்சிகளேயும் செயற்கைக் காட்சிகளேயும் திறம்பட எடுத்திருக்கிருர்கள். படப்பிடிப்பும், த்வனிப்பதிவும் சில இடங்களில் தவிர நன்ருயிருக்கின்றன. புராணப் படங்களே எடுப்பவர்கள் அந்தக் காலத்து நடையுடை பாவனேகளேக் கைவிடலாகாது. இந்திரன் தர்பாரில் ஐரோப்பிய மாதின் படமும், ஆபாஸமான டான்ஸும் காண்பிப்பது சற்றும் பொருந்தாது. ஹாஸ்யத்தைக் கதையில் நுழைக்கவேண்டுமென்பதற்காக நாமமே ஏற்படாத காலத்தில் பட்டைபட்டையாக நாமத்தைச் சாத்தி, கௌதமரின் பின்னேடு ஓடிவரச்செய்வதும், சிஷ்யர்கள் ஆசிரமக் கட்டுப்பாட்டை மீறி ஆடிப் பாடிக் கூத்தாடுவதும் பொருந்துமா? மகா தவசிரேஷ்டரான கௌதமரைத் தக்ஷணேக்காக ஓடும் தற்கால பிராம்மண யாசகனேப் போல ஆட்டி வைத்திருப்பது சற்றும் தகாது. தன்னே வஞ்சித்து இந்திரன் செய்யும் அக்ரமத்தை ஞான திருஷ்டியாலறிந்து முடுகி வந்து இந்திரனேச் சபித்த கௌதமர், நடுங்கி மூர்ச்சித்து விழுந்த அகல்யையைத் தெளிவித்துச் சாந்தப்படுத்தி, சாவகாசமாக சபிப்பதானது, ஒரு வைத்தியன் நோயாளியை 'நீ கொஞ்ச நாள் உப்பில்லாப் பத்தியமிருந்தால் நல்லது' என்று புத்திமதி கூறுவதுபோலிருக்கிறது. நன்ருக நடிக்கவேண்டிய இடங்களிலெல்லாம் பாட்டைப் போட்டுக் குளறுபடி செய்திருப்பது நடிகத் திறமையைக் காண்பிக்க சந்தர்ப்பமில்லாமற் செய்துவிடுகிறது. பாட்டுகள் நன்ருயிருந்தாலும் சமயாசமய மில்லேயா? நாஸ்திகர்களும், மேனுட்டாரும் புராணங்களேயும், இதிகாசங்களேயும் இழிவுபடுத்தும் இக் காலத்தில் புராணப் படங்களே எடுப்பவர்கள் அதிக சிரத்தையுடன் விஷயங்களேக் கிரஹித்து எடுப்பது மிகவும் அவசியமாகும்.

---

# பக்திப் பெருக்கு

"பாக்கியம்! இன்னும் ரெண்டு நாள் முன்னே வந்திருக்கக் கூடாதா? என்ன வைபோகம்...என்ன ஆநந்தம்! அடாடாடா!'' என்று பாட்டி சேமியா பிழிந்துகொண்டே கேட்டாள்

பாக்கியம் :—பாட்டீ! நீங்க நன்னு குடுத்துவெச்சவா... ....... என்னிக்குமில்லாதெ எனக்கு திடீன்னு ஊர்ப்ரயாணம் ஏன் வரணும் சொல்லுங்கோ...நீங்க ஊரையே விட்டுட்டு திருவல்லிக்கேணி யோடே ஒருவாரமும் போய்ட்டீர்களாமே......ரொம்ப கூட்டம் எங்கெங்கேந்தோ வந்திருந்ததாமே.........வீருசாமி மேளமாம். பெரிய பெரிய வித்வான்களால் காலக்ஷேபமாம் என்னமோ போங்கோ! குடுத்துவைக்காதெ கட்டையா பூட்டேன்........

பாட்டி :—ஆமாண்டீயம்மா! குடுத்துவெச்சவாளுக்குத்தான் அந்த ஆநந்தம் கெடெக்கும், திருவல்லிக்கேணிலே எங்க அம்மாஞ்சி மன்னி திங்காடி இருக்காளேன்னெ அவாத்துக்கு போய்ட்டேன், கோயிலே கெதியா ஆயிரக்கணக்கான ஜனத்தோடெ நானும் இருந்தேன். க்ளப்பிலே நாகரீகம் மட்டும் பாக்கிரோம்......கோவில்லே பாரு நாகரீக பொண்டுகளும் நெரெய்ய வந்திருந்தா. நம்ப கர்னுடக படியே மூஞ்சிலே பச்சு பச்சுன்னு மஞ்சளும், திருமண் ஸ்ரீ சூர்ண மும், குங்குமமும் விபூதியும், தல்லெ சொருக்கும் கோடாலி முடுச்சும் பனப்பாக்கத்தான், வெலங்கிமான் முதலிய ஊரின் காலிரங் கின பழங்காலத்துப் புடவையும் கட்டிண்டு வடமேலாக்கும், எட மேலாக்குமா ஏராளமான பொண்டுகள் வந்திருந்தா....

பாக்யம் இது இருக்கட்டும் ஜெயில்லே இருந்தாப்பொலே ஒரு வருஷம் இருந்து வெளியிலே வந்த என்னப்பன் கருணமூர்த்தி மங்கள ஸ்வரூபனன பார்த்தஸாரதி ஒருபக்கம் எல்லார் மனசெயும் கொள்ளே கொள்ராப்பலே ஏள்னி இருந்தார். எதிரிலே யாக குண்டங்களில் யாகம் நடந்தது. கீழேயோ ஒருபக்கம் நாலாயிரம் சேவைசெய்யும் பக்த கோஷ்டி, ஒருபக்கம் சாம கானம், ஒரு பக்கம் வேதபாராயணம், ஒருபக்கம் ராமாயண பாராயணம், ஒருபக்கம் ஸஹஸ்ர நாமம்' அடாடாடாடா..... அந்த ஆநந்த கோஷத்தின் அருமெயெ சொல்லவே முடியலெடீ......

வீட்டிலே துரும்பெடுத்துகூட போடாத பணக்கார பொம்ம ஞட்டிகள் சிலபேர் யாகத்துக்கு நெய்யும், தேங்காயும், அரிசியும் தாங்களே பக்தியோடே தூக்கிண்டுவந்த காட்சியெ பார்கணமே... ...சாப்பாட்டுக்கோ பஞ்சமே இல்லெ......விமானத்தின் அழகும் சித்திர வேலெயின் கவர்ச்சியும் ஜனக்கூட்டங்களின் பக்திப் பெருக் கும் இந்த பலவிதமான கோஷ்டிகளின் இனிய ஒலியும், யாகத்தின்

அற்புதமும், எம்பெருமானின் சேவையும் வெறமெ கண்கொள் ளாத காக்ஷின்னு போராதுடியம்மா......இதுதான் வைகுண்டம்னு நானும், சீவரமங்கையும், திங்காடியும் சொல்லிண்டே இருந்தோம்.

பாக்ய :—பாட்டீ! நீங்க சொல்ல சொல்ல எனக்கு இன்னும் துக்கமா வரது. இன்னும் என்ன நடந்தது?

பாட்டி:—வீருச்சாமி மோளம் வாசிச்சதெ பாரு என்ன ஆநந் தம். நான் அதையும் விடல்லே பாட்டுன்னுத்தான் பயித்திய மாச்சே....அங்கே இருந்த அழகெ பாக்கச்சே எனக்கு என்ன தோணித்து தெரியுமா ...இத்தனெ பொம்மண்டாட்டிகள் இருக் காளே. யாரானுலும் நன்னு ஸாரமான விஷயங்கள் தெரிஞ்சவா ளேயோ, ப்ரபந்தம் முதலான பாசுரங்கள் பாடத் தெரிஞ்சவாளேயே பொம்மனுட்டிகளேயே பாத்து பொறுக்கி பாடச்சொல்லக்கூடாதா ...எத்தனெ ஆநந்தமா கேக்கலாம்......பொம்மனுட்டி எல்லாம் பஜனெ பண்ணக்கூடாதா......தின்னுப்புட்டு வெறமெ ஒக்காண் டிருக்காளே....அப்படி செய்தா எத்தனெ அழகா இருக்கும்னு நெனச்செின்...இன்னும் அப்படி பகவான் சன்னிதானத்திலே செய்ய யாருக்கும் தைரியம் வரல்லயே...

பாக்கி:—எம் பாட்டி! நீங்க இப்ப சொல்லச்சேயே அப்படி ஒரு பொம்மனுட்டி பஜனெ கோஷ்டி ஒன்னு கண்ணெதிரெ தெரிய ராப்பலெ இருக்கு ஏன் செய்யக்கூடாது. பகவான் சேவிக்கரத் துலெ பஜனெ முக்யமில்லேயோ...அப்புறம் இன்னும் என்ன நடந்தது?

பாட்டி :—பாக்யம்... மறந்து மறந்துபோரதுடீ!...கொளத்தெ சுத்தி பசுமாடுகள் நின்னு தீனி தின்ன அழகு இருக்கு பாரு வர் ணிக்கவே முடியாது....இது கோகுலமா, திருவல்லிக்கேணியான்னு சந்தேகமாப் பூடுத்து. ஒரு நாளும் அத்தெனெ பசுமாட்டையும் நாம்ப அந்த மாதிரி பாத்தே இருக்கமாட்டோம்...அந்த காட்சியெ பாக்கரத்துக்காக கொளத்தெ சுத்தி சுத்தி வந்தேன். கோவில்லே வளக்கின் வகைகளே சொல்லவே வேண்டாம்......கண்ணெப் பறிச் சிண்டு பூடுத்து. என்னமோம்மா! இந்த ஜென்மத்திலே இந்த மாதிரி ஒரு பாக்கியம் கெடைக்கும்னு நான் நெனக்கவேல்லே...... அந்த கடைசீ நாள் ராத்திரிதான் ஒரு கெருடசேவை நடந்ததுபாரு ......அடாடாடா......இந்த கைங்கரியத்தெ செய்துவெச்ச புண்ணியவான்கள் எத்தெதான் குடுத்துவெச்சாளோ......பாக்யம் .......இப்போ ப்ரம்மோத்ஸவம் நடக்கறது. நாளெக்கு கருடசேவை யாம், இன்னிக்கு சாயங்காலமே நாம் போகலாம்........ நீ தயாரா வந்துடு.......இதோ பாரு கை வலிக்கிறது. நாலு சேமியா பிழிஞ் சுட்டுப் போயேன்......

கவிதா மண்டலம் :

# சிறை சென்ற செல்விக்கு!

[சென்ற 1932 வருஷத்தில் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தின் போது சிறை சென்ற ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளுக்கு, அன்னாரின் சிறிய தகப்பனாரும், திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியருமான திரு. ராகவாசாரியர் வேலூர் சிறைக்கு விடுத்த செய்யுட்களைக் கீழே தருகிறோம். அதில் ஆசிரியரின் செய்யுள் இயற்றும் திறமையும், மனமுருகிப் பாடிய பாடல்களின் இனிமையும், அவரது பரந்த அன்பொழுகு தேசியப் பற்று மிக்க கனிவும் ஒருங்கே கண்டு களிக்க நேயர்கள் தவறாரென நம்புகிறோம்.

ஸ்ரீ. திரு. ராகவாசாரியர் 9—6—1935-ல் காலமாகி விட்டதனால், அவரது அரிய மொழிகளை அனைவரும் அறிய ஆர்வம் கொள்வது இயற்கையே; ஆதலின் அவரது மனைவியாரின் அனுமதி பெற்றுப் பிரசுரிக்கிறோம். [ப-ர்]

வெண்பா

காந்தி யடிகள் கருத்தின்வழி யொழுகின்
மாந்தர் பிழைக்கும் வகையறிவார்—தாந்தம்
கடமை யறிந்து கடைபோகச் செய்யின்
அடிமை ஒழியும் அகன்று.

———

அன்பின் பெருக்கே! அணிகலமே! ஆருயிரே!
இன்பின் உருவே இசைத்தேனே!—துன்பம்
உழன்றும் உலகம் ஒழுங்குபெற நீயும்
சுழன்று சிறையுற்றாயோ சொல். 1.

செழுங்கயற் கண்மானே! சிறையிலிருந்து ஞாலம்
ஒழுங்குபடச் செய்யும் ஒளியே!—தொழுங்கமலை
அன்னாய் அணியே அமுதத்தின் இன் சுவையே!
எந்நாளெதிர் நிற்பாய் இங்கு. 2.

உனைப் பிரிந்து நாங்கள் உறுதுயர மெய்தல்
தினைத்துணையும் தேறாயோ தேனே!—அனைத்துலகும்
உய்ய வுடனுறையும் ஒண்டொடியார் நால்வரைப் போல்
பைய வெதிர்நிற்பாய் பரிந்து. 3.

பரிந்துன்னைப் போற்றிப் பழகுகின்ற நால்வர்
விருந்தளிக்க வுண்பாய்நீ வேட்ட—திருந்துதவும்
அன்னார்க் கிசையளித்தே ஆருயிராய் நிற்பாய்
எந்நாள் எமக்கீவாய் இன்பு. 4.

உலகத் தாருய்ய ஒருப்பட்டு நாளும்
திலகமே! சேர்ந்தாய் சிறையில்—பலகற்றும்
உண்மைப் பயனெய்தா தோருலகில் வாழ்கின்றோம் 5.
எண்மை இதுவன்றோ இயம்பு.

1—5—32

—திரு. ராகவாசாரியர்

# உதிர்ந்த மணிகள்

## மாணவர்கள் கடமை

படிப்பில் இந்த முறை தவறு, அந்த முறை தவறு என்று சொல்பவர்களைக் கேட்டு, நீங்கள் கலவரமடையக் கூடாது. இருக்கும் முறைப்படி பாடங்களைச் சரியானபடி கற்பதே உங்கள் கடமை.

—ஸி. ராஜகோபாலாசாரியர்.

## விபசாரம் ஏன்?

பொருளாதாரக் கஷ்டத்தாலும், குடும்ப சந்தோஷம் இல்லாததாலும் ஸ்திரீகளும் புருஷர்களும் விபசாரத்தில் இறங்குகிறார்கள்.

—மிஸஸ். கஸின்ஸ்.

## பொதுமக்கள் ஸ்தாபனம்

காங்கிரஸ் பொது மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் ஸ்தாபனமாக மாத்திரம் இல்லாமல் பொது மக்களின் ஸ்தாபனமாகவே இருக்கவேண்டும்.

—எம். என். ராய்.

## குறுகிய மனப்பான்மை

அடிமை வாழ்வும் அந்நிய ஆதிக்கமும் நம்முடைய மனப்பான்மையைக் குறுக்கிவிட்டன.

—புலாபாய் தேசாய்.

## பாடகர்களுக்கு வேண்டியவை

பாடகர்களுக்குத் தெய்வபக்தி, பாஷாஞானம், தேகத்தைச் சரியாகக் காப்பாற்றிக் கொள்ளல், ஆகாரங்களில் கட்டுப்பாடு முதலியவை மிகவும் அவசியம்.

—மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

## உண்மை அபேத வாதம்

அபேதவாதமென்றால் தனவந்தர் பணத்தைக் கொள்ளையிடுவதென அர்த்தமில்லை. அது ஒரு பொருளாதார ஏற்பாடேயாகும்.

—ராஷ்டிரபதி ஜவஹர்.

## புனித ஒப்பந்தம்

ஸவர்ண அவர்ண ஹிந்துக்களைப் பிரிப்பதைத் தடுக்க வேண்டியே எர்ரவாடா ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டதென்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை.

—மகாத்மா காந்தி

## ஆசிரியர்கள் கவனிப்பார்களா?

கிராமவாசிகளுக்குத் தகுந்த புத்தகங்களையும் உல்லாசமாகப் படிப்பதற்கான புத்தகங்களையும் எழுத வேண்டும்.

— ஸர். சாப்ரு

# மந்திரி பதவி பிரச்னை

காரியக்கமிட்டி மேற்கண்ட விஷயமாகக் கொண்டுவந்த தீர்மானம் மெஜாரிடியுடன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியது. சாதகம் 127 பாதகம் 70.

தீர்மானத்தின் முழு வாசகம் பின்வருமாறு:—

## வோட்டர்களுக்கு நன்றி

“ காங்கிரஸ் கொள்கையையும் திட்டத்தையும் வோட்டர்கள் அங்கீகரிக்கிறார்களென்பது சமீபத்தில் நடந்த தேர்தல்களினின்று தெரிந்துவிட்டது. தேசம் இப்போது காட்டிய மகத்தான ஆதரவை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மனமாறப் போற்றுகிறது.

“ சுயேச்சையடையும் லட்சியம், புதிய அரசியல் திட்டத்தை அடியோடு நிராகரித்தல்; இந்தியாவின் அரசியல் திட்டத்தை நிர்ணயிக்க அரசியல் நிர்ணய'சபையைக் கோரல் முதலியவைகளை முன்னே வைத்து காங்கிரஸ் இந்தத் தேர்தலில் ஈடுபட்டது.

## சட்டத்தைத் தகர்ப்போம்

“ புதிய அரசியல் திட்டத்தை எதிர்ப்பதும் அதை சமாப்தி செய்வதுமே காங்கிரஸின் கொள்கை. இந்தக் கொள்கைக்கும், திட்டத்துக்கும் பொது ஜனங்கள் பேராதரவு காட்டி ஆமோதித்துவிட்டனர். ஆகவே புதிய அரசியல் திட்டத்தை மக்கள் பூராவும் நிராகரிக்கின்றனர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எந்த ஜனநாயக முறையைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறார்களோ அதே ஜனநாயக முறையில் இந்தப் புதிய சட்டம் கண்டிக்கப்பட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

“ தேசிய சுதந்தரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியலை அரசியல் நிர்ணய சபை மூலம் தாங்களே வகுத்துக்கொள்ள ஜனங்கள் விரும்புகிறார்களென்பதைக் காட்டிவிட்டனர். அந்த அரசியல் நிர்ணய சபையானது, வயது வந்த அனைவருடைய வோட்டுப்பெற்று அமைக்கப்படவேண்டுமென்றும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

“ ஆகவே இந்தப் புதிய அரசியல் திட்டத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று இந்திய மக்களின் சார்பாக இந்தக் கமிட்டி எடுத்துக் காட்டிக் கேட்கிறது.

“ ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக இந்தப் புதிய அரசியலையே நுழைப்பதென்று பிரிட்டிஷ் சர்க்கார் விடாப்பிடியாக முயல்வார்களானல், சட்ட சபைகளிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் சட்ட சபைக்குள்ளேயும் வெளியேயும் இந்தப் புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து, சமாப்தி செய்யும் காரியத்திலேயே மும்முரமாயிருக்கவேண்டு மென்பதையும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஞாபகப் படுத்துகிறது.

## இந்தியா-பிரிட்டன் தகராறு

“ அரசியல் திட்டத்தை ஒழிப்போமென்ற கொள்கையை எடுத்துக் கூறித்தான் ஓட்டர்களிடம் வோட்டு பெற்றோம்; அமிதமான வெற்றியும் கிடைத்தது என்பதை இக் கமிட்டி ஞாபகப்படுத்துகிறது. இந்தக் கொள்கையை அவலம்பிப்பதால், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் நமக்கு மிடையே கட்டாயம் முட்டுக் கட்டைகள் விழும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய தேசியத்துக்குமுள்ள இயற்கையான விரோதத்தையும் இன்னும்

பகிரங்கமாக இந்தக் கொள்கை காட்டும். புதிய அரசியல் திட்டத்தின் எதேச்சாதிகாரத் தன்மையையும், ஜனநாயகமற்ற தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்கும்.

"1937 பிப்ரவரி 27, 28ந் தேதிகளில் வார்தாவில் காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை அ. இ. கா. கமிட்டி ஆதரிக்கின்றது. சட்ட சபை காங்கிரஸ் மெம்பர்களின் சட்டசபை நடவடிக்கை, பொதுஜன பாந்தவ்யம், சட்டசபைகளில் காங்கிரஸ் கொள்கை அவலம்பனம், சட்ட சபைக்கு வெளியேயும் அந்த மெம்பர்கள் செய்யவேண்டிய காரியங்கள் ஆகியவைகளையும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கவர்னர் விசேஷாதிகார விஷயம்

"முன்னால் விவரிக்கப்பட்ட கொள்கைகளுக்கேற்ற வண்ணம் அ.இ.கா. கமிட்டி ஆலோசித்து, காங்கிரஸ்காரர் பதவி ஏற்பதை அனுமதிக்கிறது. எந்தெந்த சட்டசபைகளில் காங்கிரசுக்கு மெஜாரிடி இருக்கிறதோ அந்தந்த மாகாணங்களில் பதவி ஏற்கலாம். இன்னொரு நிபந்தனையும் உண்டு. மந்திரி சபை வேலை செய்யும்போது அந்த மந்திரிகளின் ஆலோசனைகளைக் கவர்னர் புறக்கணிக்கமாட்டாரென்றும் மந்திரிகளின் அரசியல் பூர்வமான நடவடிக்கைகள் சம்பந்தமாக கவர்னர் விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிக்கமாட்டாரென்றும் சட்டசபைக் காங்கிரஸ் கக்ஷித் தலைவர் பகிரங்கமாக எடுத்துரைக்கும்படியான ஸ்திதி ஏற்பட்டிருக்கவேண்டும்.

---

# அ. இ. கா. கமிட்டிக்கு வந்தவர்கள்

## 212 பேர்கள் பிரசன்னம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு மொத்தம் 294 அங்கத்தினர்கள். அதில் காரியக் கமிட்டி அங்கத்தினர்களுள்பட 212 பேர்கள் இந்தக் கூட்டத்துக்குப் பிரசன்னமாகி யிருந்தனர்.

மாகாண வாரியாகப் பின்வரும் தொகையினர் வந்திருந்தனர்.

| | | | |
|---|---|---|---|
| அஜ்மீர் | 4 | மகாராஷ்டிரம் | 12 |
| ஆந்திரா | 17 | நாகபுரி | 4 |
| அஸாம் | 3 | எல்லைப்புறம் | 1 |
| வங்காளம் | 20 | பஞ்சாப் | 12 |
| பீஹார் | 21 | ஸிந்து | 4 |
| பம்பாய் | 4 | தமிழ்நாடு | 20 |
| பர்மா | 1 | ஐக்கிய மாகாணம் | 28 |
| டில்லி | 5 | உத்கல் | 2 |
| குஜராத் | 12 | விதர்ப்பம் | 3 |
| கர்நாடகம் | 12 | காரியக் கமிட்டியினர் | 15 |
| கேரளா | 2 | | |
| மகாகோசலம் | 10 | மொத்தம் | 212 |

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம்

"பதவி ஏற்பதா, வேண்டாமா?" என்கிற விஷயத்தைப்பற்றித் தீர்மானிப்பதற்காக மார்ச் மாதம் 10-ம் தேதி சென்னையில் கூடியதில் மொத்தம் 233 அங்கத்தினர்களில் 118 பேர்களே வந்திருந்தனர். இவ்வளவு முக்யமான விஷயத்தில் இத்தனை பேர்கள் அச்ரத்தை காட்டியது மிகவும் வருந்தத் தக்கது. பதவிகளை வகிக்க ஆசைப்பட்டுப் போட்டி போடுபவர்கள் சமயத்தில் தங்களது கடமையினின்றும் தவறுவது போற்றத் தக்கதல்ல.

## சென்னை மாகாண காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள்

**தலைவர்**

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார்

**உப தலைவர்கள்**

ஸ்ரீமான்கள். பிரகாசம், வேதரத்னம், ராமன் மேனன்.

**காரியதரிசிகள்**

ஸ்ரீமான்கள். கொண்டா வெங்கடப்பய்யா, டாக்டர். யு. ராம ராவ் எஸ். ராமநாதன்.

**பிரதம கொறடா**

ஸ்ரீ. ஏ. காளேஸ்வர ராவ்.

**கொறடாக்கள்**

ஸ்ரீமான்கள். பாபிநீடு, கோபால் ரெட்டி, ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி, ஆர். எஸ். வெங்கட்டராமய்யர், ஏ. ராகவ மேனன், எம். பக்தவத்சலம், என். எஸ். வரதாச்சாரி, சி. பி. சுப்பையா, கராண்ட், டி. விஸ்வநாதம்.

**பொக்கிஷதார்**

ஸ்ரீ. வி. நாடிமுத்து பிள்ளை.

---

## மெரினபேச்சு :: எதிர்பாரா ஹாஸ்யங்கள்

'நாளை கேட்டார்'

இந்தியா சட்டசபைக் கூட்டத்தை ஏன் ஒத்தி வைத்திருக்கக்கூடாதென்று, நாளை காலை சர். முகம்மது யாகூப் இந்தியா சட்டசபையில் ஒரு கேள்வி கேட்டார்.

—ஸர். முகமது யாகூப் கேள்வி.

**'ஒபய துல்லவா—ஹரூண'**

மௌலானா ஒபயதுல்லா எழுந்து; இந்தியாவுக்குள் வரக்கூடாதெனக் கவர்ன்மெண்டால் தடை யேற்படுத்தப்பட்டிருக்கிறதா?

—ஹாஜி அப்துல்லா ஹரூன் கேள்வி.

## "மணி" தெரியவேண்டுமா ?

பூரி—ஹௌரா எக்ஸ்பிரஸ் 7 நெ ரயில் பாதையை விட்டு விலகுவதி லிருந்து தெய்வாதீனமாகத் தப்பித்தது. 630 நிமிஷம் தாமதித்து வண்டி வந்து சேர்ந்தது. விபத்து ஒன்றும் ஏற்படவில்லை. இதன் பயனாக மதராஸ் மெயில் 515 நிமிஷம் தாமதித்து வந்தது. —அசெம்பிளி பதில்

## 'கூட்டுப்பாடு'

கூட்டுப்பாடு என்றதன்பேரில் எழுந்த பிரச்னை சம்பந்தமாக தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியார் கேட்டிருந்தபடி விலகிக்கொண்டார்.

—கோவில்பட்டிச் செய்தி.

## வேலை நிறுத்தம் இல்லை!

இந்த ஒரு வருஷ காலமும் தொழிற்சாலையானது சுலபமாகவே வேலை செய்து வந்ததை உத்தேசித்து தொழிற்சாலையின் நிர்வாகஸ்தர்கள் நேற் றைய தினம் அந்த தொழிற்சாலையின் தொழிலாளர்களுக்கு விடுமுறை அளித்தார்கள். —நாகப்பட்டணம் மில்ஸ்.

[குறிப்பு: ஒரு பிரபல தமிழ்தினசரியிலிருந்து 'வழிப் போக்கன்' திரட்டியவை இவை]

## கிராமப் புனருத்தாரணத்தில் மகாத்மாவின் நம்பிக்கை

டில்லியில் நடக்கும் காங்கிரஸ் கன்வென்ஷனுக்கு வரவேண்டுமென்று, இந்த கன்வென்ஷனின் வரவேற்புக் கமிட்டித் தலைவரான பண்டித இந்திரா வும், மற்றவர்களும் காந்திஜியிடம் சென்று அவரை அழைத்தனர்.

இதற்குக் காந்திஜீ சொல்கிறார் :—

"நான் ஜவஹர்லாவின் கைதியாயினும், அவருடைய உத்திரவுப்படி நடக்கக் கடமைப்பட்டவனாயினும், தற்சமயம் என்னுடைய மனமெல்லாம் கிராம சேவையில்தான்-அதுவும் சிவகிராமத்தில்தான்-இருக்கிறது.

நான் ஒரு வழியில் போய்க் கொண்டிருக்கிறவன். இத் தருணம் இன் னொன்றைப் பற்றிச் சிந்திக்க முடியாது. இச் சமயம் என்னுடைய மனம் மேற் சொன்ன திசையில் தான் சென்று கொண்டிருக்கிறது.

உங்களுக்கு ஏதாவது ஒன்று கொண்டுவரும்படியான ஸ்திதியில் நான் இருந்தவுடனே நீங்கள் அழைக்கும் வரை காத்திராமல் நானாகவே வருவேன்.

நான் கிராமத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பதில் அர்த்தமிருக்கிறது. என்னுடைய நம்பிக்கைகள் பிரகாசமடைந்துகொண்டு வருகின்றன" என்றார்.

அங்கு கூடியுள்ள கிராமவாசிகளையாவது நோக்கிப் பேசும்படியாகக் கேட்டுக்கொண்டபோது, "என்னுடைய மனமெல்லாம் இப்பொழுது சிவ கிராமத்தில் இருக்கிறது" என்றார்.

———

# மணி வாசகம்

## மந்திரி பதவியும் தலைவர்களும்

ஸ்ரீ. ராஜாஜி பதவி ஏற்புத் தீர்மானத்தைப்பற்றிப் பேசுகையில் கூறியதாவது :—

"அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டனர். கவர்னரிடம் முதலில் உறுதி கேட்பதே சத்தியாக்கிரகிகளின் போக்குக் கேற்ற காரியம். காங்கிரஸில் கூட இத்தலைவர்கள் தங்களுடைய மனப்பான்மையைத் தெளிவுபடுத்திவிடுவார்கள்.

கவர்னர் விசேஷாதிகாரங்களை உபயோகிப்பதில்லையென்று உறுதி கொடுக்க மறுத்தாரானால், நாம் அதைப்பற்றிய சிந்தனையே ஒருபோதும் இல்லாதிருந்தவர்கள் போல் நடந்துகொள்ளுவோம்.

உறுதி கொடுத்துவிட்டு, கவர்னரே அதை மீறினால் நாம் வெளியேறி விடுவோம். முற்சொல்லிய நடை முறை அனாவசியமென்று கருதுவோருளர். ஆனால், நாம் கோரிக்கையை வெளியிட்டுவிட்டோம். இப்போது அக் கோரிக்கையை வாபீஸ் வாங்கிக்கொண்டால், தவறான அபிப்பிராயம் பரவும். ஆதலால், இப்போதுள்ளபடியே தீர்மானத்தை நிறைவேற்றும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

தமது பிரசங்கத்தினிடையே ராஷ்டிரபதி ஜவஹர் குறிப்பிட்டது :—

சட்ட சபைகளுக்குள் செய்யும் வேலை குறுக்கமானது. இதில் பதவியேற்புபற்றி விசேஷ விவாதம் நடந்திருக்கிறது. இது அநாவசியம். பிரிட்டிஷாருக்கு மிகவும் ஏற்றதான முறையில் இந்திய மக்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளிக்காட்டிவிட்டார்கள். சட்ட சபையிலுள்ள காங்கிரஸ்காரரின் கடமை பல தீர்மானங்களின் மூலம் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. நாம் பிரதிநிதி சபையை அமைத்து இந்திய அரசியலை நிர்ணயிக்க முயலவேண்டும். சட்ட சபைகளில் நம்முடைய நடை முறைக்கு ஒத்து வராத கட்சியாருடன் நாம் எவ்வித உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, பதவி ஏற்புப்பற்றி முடிவு செய்துவிட்டது. அதன் தீர்மானம் இம் மகா நாட்டைக் கட்டுப்படுத்தும். உண்மையான ஜனநாயக ஆட்சியில் பதவி மறுப்பது தவறென்பதை நான் ஒப்புக்கொள்ளுவேன். ஆனால், இப்போதுள்ள அரசியல் திட்டம் உண்மை ஜன நாயக ஆட்சி முறையை, கொடுக்கவில்லை; எனினும் காங்கிரஸ் கமிட்டி ஒருவிதமாக முடிவு செய்துவிட்டது. நான் அதற்குப் பணிந்து நடப்பேன். எதிர்பார்க்கப்பட்ட நிலைமை மாறிவிட்டால், நான் காங்கிரஸ் தலைமையிலிருந்து விலகி வெறும் ஊழியனாவது உறுதி.

காந்திஜீ, பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கையில் தெரிவித்ததைக் கீழே காணலாம்.

இத்தீர்மானம் மிக்க யோக்கியமான தீர்மானமாகும் மனதில் ஒன்றையும் மறைத்து வைத்துக்கொள்ளாமல் இது செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், இதனைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் படிக்காமல், மொத்தமாகச் சேர்த்துப் படிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் உத்தியோக மேற்கவேண்டுமெனக் கவர்னர் விரும்பினால், அவர்கள் தம் மாகாணத்திலுள்ள காங்கிரஸ் தலைவருக்குப் பூரண திருப்தியை அளிக்கவேண்டும். அம்மாதிரி அவர்கள் செய்வதற்குச் சங்கடமளிக்கக்கூடிய தெதுவும் தீர்மானத்திலிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. மாகாண கவர்னர்களுக்குச் சில விஷயங்

களில் உசிதா உசிதப்படி நடக்க அதிகாரமிருக்கிறது. அது விஷயமாகவே மாகாண கவர்னர்கள் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பூரண திருப்தியை அளிக்க வேண்டும். தீர்மானம் எதையும் அளிக்கும்படி கேட்கவில்லை. கவர்னரால் சட்டப்படி மந்திரி சபையை அமைக்க அழைக்கப்படும். எந்தத் தலைவரும் காங்கிரஸ் தீர்மானத்தை உதாரணமாக விளக்க உபயோகிப்பார். அவர் தீர்மானத்திற்குட்பட்ட விஷயங்களில் கவர்னரிடமிருந்து உறுதிமொழி கேட்பார். இதற்குமேல் நான் எதுவும் சொல்ல முடியாது. உத்தியோகமேற்றால், வேலை விவரங்களை நிர்ணயிப்பது காங்கிரஸின் நித்தியப்படி வேலையைச் செய்வோரது கடமையாகும்.

இங்கிலாந்தில் வெளியாகும் "மான்செஸ்டர் கார்டியன்" குறிப்பிட்டிருப்பதாவது :—

காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் காணப்படும் சீர்திருத்த வேலைகளில் பெரும்பாலானவை, ஜனநாயகத் துறையில் செல்ல ஆரம்பித்துள்ள எந்த நாடும் சீக்கிரத்திலோ சிறிது காலங்கழித்தோ செய்யவேண்டிய சீர்திருத்தங்களே யாகும். காங்கிரஸ் வாதிகள் உற்சாகத்துடன் சாமர்த்தியமாகவும் சட்ட விஷயங்களில் திறமையுடனும் தங்கள் சீர்திருத்த வேலைகளை நடத்தி வைப்பாராயின் கவர்னர்கள் அதில் தலையிடக்கூடாது. ஏனெனில், அங்ஙனம் தலையிடுவதால் யாருக்கும் நன்மை ஏற்படாது.

# தேசீய கன்வென்ஷன்

மார்ச் ௴ 19-ம் தேதியன்று டில்லியில் கூடிய தேசீய கன்வென்ஷன், நம் பாரத நாட்டின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாகும். சுமார் 800 காங்கிரஸ் சட்ட சபைக்காரர்களும், 200 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் மத்தியில் நின்று தேச விஸ்வாசப் பிரமாணம் ஏற்ற காட்சியின் அற்புதத்தையும், ஆனந்தத்தையும், புனிதத் தன்மையையும் வர்ணிக்க இயலாது.

பண்டித இந்திரா பிரதிநிதிகளை வரவேற்றபின், பண்டித நேரு பேருரை நிகழ்த்தி, பின்கண்ட பிரமாணத்தை வார்த்தை வார்த்தையாகக் கூற, ஆயிரம் குரல்கள் ஏக காலத்தில் உச்சரித்தது காதுகளில் பிரமாத ரீங்காரம் செய்ததுபோலிருந்தது.

# தேச விஸ்வாசப் பிரமாணத்தின் வாசகம்

பிரமாணத்தின் மொழி பெயர்ப்பு பின்வருமாறு :—

'அகில இந்திய கன்வென்ஷன் மெம்பராகிய நான் இந்தியாவுக்கு ஆற்றவேண்டிய சேவைகளைச் சட்டசபையிலும் வெளியிலும் செய்வதாகப் பிரமாணம் செய்கின்றேன். இந்தியா சுதந்திர மடையுமாறும், இந்திய மக்களின் வறுமை தொலையுமாறும் உழைப்பதே எனது காரியம். இந்தியாவின் விடுதலைக்காகவும், இந்தியாவின் சுமைகளை நீக்கவும் பாடுபடும் காங்கிரஸ் மகாசபையின் லட்சியங்களைச் சாதிப்பதற்காக, காங்கிரசின் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து நான் தொண்டாற்றுவேன்.''

தேசிய கன்வென்ஷனில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. புதிய அரசியல் திட்டம் வாபீஸ் ஆகவேண்டுமென்றும், அரசியல் நிர்ணய சபை ஏற்படவேண்டு மென்றும் கருத்துக்களடங்கிய தேசிய கோரிக்கை.

2. சட்டசபைகளில் காங்கிரஸ் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டு மென்பது பற்றி, வார்தாவில் காரியக் கமிட்டி தீர்மானித்ததையும், பிறகு மார்ச்மீ 18உ அ. இ. கா. கமிட்டி அதை ஆமோதித்ததையும் சட்ட சபையினருக்கு நினைப் பூட்டுவது.

3. "மாகாண சட்டசபைகளிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் சட்ட சபையிலும் தங்கள் தொகுதிகளிலும் வேலை செய்யவேண்டும். வெளியே ஜனங்களின் பின்பலமிருந்தால்தான் சட்ட சபையில் தீவிர விஷயங்களைச் சாதிக்க முடியும். ஆகவே காங்கிரஸ் மெம்பர்கள் தத்தம் தொகுதியிலுள்ள ஜனங்களுக்கு அவ்வப்போது தகவல்கள் கொடுத்துக் கொண்டும் அவ்வப் போது அவசியமாகும் பிரச்னைகளில் ஜனங்களுக்கு உதவி செய்து கொண்டு மிருக்க வேண்டும். பொது ஜனங்களின் பிரதிநிதி என்ற ஹோதாவில் ஸ்தல காங்கிரஸ் ஸ்தாபனத்தோடும் உறவு வைத்துக்கொள்ள வேண்டும். சட்டசபைக் காங்கிரஸ் கட்சிகள் தத்தம் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு அவ் வப்போது ரிபோர்ட் சமர்ப்பித்துக் கொண்டிருக்கவேண்டும்."

# முஸ்லிம்களின் கடமை

## முஸ்லிம் லீக் தலைவரின் வேண்டுகோள்

அகில இந்திய முஸ்லீம் லீக் தலைவரான சர் வஸீர் ஹஸன் அ. பி. நிருபரிடம் பின்வருமாறு கூறினர்:

"ஜனங்கள் சுதந்தரம் பெற்று விடுவதென்று தீர்மானித்துவிட் டார்கள். இந்த லட்சியத்தை அடைவதற்குச் சட்டசபைகளுக்கு வெளியே தொடர்ந்து போராட்டம் நடக்கவேண்டும். இதர வகுப் பினரைப்போல், முஸ்லிம்களும், இந்திய விடுதலைப் போராட்டத் தில் தங்கள் பங்கை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பார்களென்ப தில் எனக்குச் சந்தேகமில்லை.

முஸ்லிம்களும் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து, ஏகாதிபத்தி யத்தை வற்புறுத்த ஆரம்பித்தால், அதை யாரும் எதிர்க்க முடி யாது. நமக்குள் ஏதாவது வித்தியாசங்கள் இருந்தால், அதை ஒதுக்கி வைத்துவிடுவோம். நமது பொது லக்ஷியத்தை அடைய ஒன்று சேருவோம்

முஷ்லிம்கள் ஆயிரக்கணக்கில் காங்கிரசில் சேர்ந்து, நாட்டின் விடுதலைக்கான எல்லா நடவடிக்கைகளிலும் அத்துடன் ஒத்துழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்று நான் கருதுகிறேன். மக்க ளின் வறுமையைப் போக்குவதே காங்கிரசின் நோக்கம். இந்த நெருக்கடியான சமயத்தில் முஸ்லிம்கள் நாட்டின் மகத்தான ஸ்தா பனமாகிய காங்கிரசுடன் ஒத்துழைக்கவில்லை என்ற பழிச் சொல் லுக்கு நாம் ஆளாகாதிருப்போமாக.

காங்கிரசில் சேர்ந்தால் முஸ்லிம்களின் நலன்கள் பாதிக்கப் படுமோவென்று வகுப்புவாதிகள் கேட்கலாம். இல்லையென்றே நான் பதில் சொல்லுகிறேன்.''

# வெளிநாட்டுச் செய்திகள்

அபிஸீனியா

இத்தாலிய ராஜப்பிரதிநிதியைக் கொல்ல முயற்சித்ததற்குப் பிறகு 3 நாட்களில் 1,000 அபிஸீனியர் அடிஸ் அபாபாவில் கொல்லப் பட்டதையும், நாடெங்கும் அபிஸீனிய மக்கள் படு கொலைக்கு உள்ளாக்கப் பட்டதையும் கண்டித்து, சக்ரவர்த்தி ஹேயிலி ஸெலாஸி சர்வதேச சங்கத்திற்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்பெயின்

உள் நாட்டுக் கலகத்தில் ஒன்றும் முடிவு ஏற்படக்கூடிய நிலைமையுண்டாவதாகக் காணப்படவில்லை.

## பிலிப்பைனுக்குச் சுதந்திரம்

பிலிப்பைன் தீவுகளுக்கு 1946-க்குள் பரிபூர்ண சுதந்திரம் அளித்து விடுவதாக, தலைவர் ரூஸ்வெல்ட் முன்னர் ஏற்பாடுசெய்தது ஞாபகமிருக்கலாம். பரிபூர்ண சுதந்திரத்தை அதுவரை ஒத்திப் போடாமல் 1938-39 லேயே அமுலுக்குக் கொண்டு வந்து விடுவதென்று பிலிப்பைன் தலைவர் குவீஸானும், அமெரிக்கா சர்க்கார் அதிகாரிகளும் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டனர். சுதந்தரமளிப்பது பற்றிய திட்டத்தைத் திருத்தி யமைத்து விவரங்களைத் தயாரிப்பதற்காக நிபுணர்களடங்கிய ஒரு கமிட்டியும் நியமிக்கப் பட்டிருக்கிறது.

# பத்திரிகை விமர்சனம்

# "கிரஹலக்ஷ்மி"

[வருஷசந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா. 4. Dr. K. N. கேசரி. தபாற் பெட்டி, 752, எழும்பூர் சென்னை.]

ஸ்திரீகளின் முன்னேற்றத்தைக் கருதி வெளியிடும் இம் மாதப் பத்திரிகையின் முதல் மூன்று இதழ்கள் வரப்பெற்றோம். "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை'' என்பது பெரியோரின் வாக்கு. உண்மையான கல்வியறிவுள்ளவளே உயரிய இல்லாளாயிருக்க முடியும். சாதாரண புத்தகப் படிப்பைவிட, இம்மாதிரியான—உயர்ந்த நோக்கங்களுடன் கூடிய—பத்திரிகைகளைப் படிப்பதால் பலதிறப்பட்ட—மதம், கல்வி, பொருளாதாரம், அரசியல், சமூக—விஷயங்களில் தேர்ச்சி பெறுவதுடன், தன் வீட்டிற்குச் சேவை செய்வதல்லாமல் நாட்டிற்கும் சேவை புரிய யோக்யதை பெறுவது திண்ணம். இளைஞர்களின் எதிர்கால வாழ்வு தாய்மார்களின் கையிலிருப்பதால், அவர்கள் தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் நாட்டிலக்கணங்களை யறிந்துகொள்ளக் கூடியதும், தேசபக்தி யூட்டக்கூடியதுமான விஷயங்களை இன்னும் அதிகமாக இப் பத்திரிகையில் சேர்ப்பார்களென்று நம்புகிறோம்.

—"ராணி''

# சாந்தகுமாரி

அல்லது

# ஜீவிய ரகஸ்யம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம் :
"ஜகன்மோகினி" ஆபீஸ்.,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

[விலை ரூ. 1.

**ALL RIGHTS RELATING**
**TO THIS NOVEL**
**WHOLLY BELONG TO**
**ITS AUTHORESS**

SRIMATHI
V. M. KOTHAINAYAKI AMMAL

26, CAR STREET,
TRIPLICANE, MADRAS.

PRINTED AT TATA PRESS, MADRAS. (D.C G)

# அட்டவணை


அதிகாரம். பக்கம்.

1. வஞ்சம் மிஞ்சினுல் வாஞ்சையும் நஞ்சாம் ... 1
2. வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம் ... 13
3. உலக விநோதம்—உக்ரகத் தாண்டவம் ... 26
4. க்ரோதப் புயலும், காதற் சுழலும் ... 38
5. ஆடு திருடிய கள்ளன்—வாடி வருந்திடும் உள்ளம் ... 49
6. கலங்கும் வானில் கல்மழைத் தொடக்கம் ... 58
7. கோபத்திற்கு முன் பாபமு முண்டோ? ... 65
8. பயங்கரச் செயலில் பதறிய இதயம் ... 72
9. சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள் .... 82
10. கொலைக்கு மஞ்சாக் கொடிய அரக்கன் ... 89
11. திருட்டு நெஞ்சின் தவிப்பு—திகட்டா அன்பின் இனிப்பு 98
12. குழம்பிய குடும்பம்—கொந்தளிக்கும் பாசம் ... 114
13. சதிகாரச் சூழ்ச்சிகள்—அதிசய ப்ரவேசம் ... 125
14. அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும் ... 129
15. ப்ரேமையின் ஜோதி—பைசாசத்தின் அநீதி ... 137
16. குற்ற மறிந்த வனிதை—முற்றும் வியக்கும் சரிதை ... 145
17. அண்ணனின் கொடுமை—அணங்கின் முடிவு ... 152
18. இதயத் திறப்பு—இன்ப அணைப்பு ... 158
19. ஞானோதயப் பூரிப்பு—ஆனந்தக் களிப்பு ... 167

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

| 29½ ரூபாய்க்கு 36 நாவல்கள். | முழு விலை | | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி ,, | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனை | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பக விஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப்பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

**26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.**

## 14-வது அதிகாரம்

## அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும்

நேரே நகரத்திற்குச் சென்ற வஸந்தகுமாரி ஒரு கூடை நிறைய பழங்களும், பிஸ்கேட், பெப்பர் மெண்டு, பொம்மைகள், சொக்காய் முதலியன ஏதேதோ தனக்குத் தோன்றியவைகளை எல்லாம் வாங்கிக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் தைரியலக்ஷ்மியின் துணையைக் கொண்டு கிளம்பிவிட்டாள். காரும் வெகு வேகமாகவே செல்கின்றது. வஸந்தகுமாரியின் மனத்தில் சகோதரியைப் பார்க்கப்போகும் சந்தோஷமும், குழந்தைகளைக் கண்டு குலாவப்போகும் பேரானந்தமும் அவளை மீறிய ஆனந்தத்தைக் கொடுத்துவிட்டதால் அதே நினைவில் மனோரதக் கோட்டையும் கட்ட வாரம்பித்துவிட்டாள். மெய் மறந்த ஆநந்தமுண்டாகிவிடினும் பயித்தியம்போல் ஆகிவிடு மல்லவா?

கிருஷ்ணகுமாரியின் வீட்டில் சாந்தமூர்த்தியும், ப்ரகாசமும் திடும் ப்ரவேசமாகச் சந்தித்த உடனே சில விநாடி நேரம் இருவரும் மௌனம் சாதித்தார்கள் லதா இவர்களின் விழிப்பையும் நிலைமையையுங் கண்டு ஒன்றுமே விளங்காமல் இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். தன் பிதாவிடம் ஓடி "அப்பா! அப்பா! இவர்தான் சைக்கில் மாமா...இவர்தான் எனக்கு எல்லாம் வாங்கிக் குடுப்பா!"...என்று கூறினாள்.

அதே சமயம் ப்ரகாசம் கண்ணீர் பெருக, நாத் தடுமாறிய படியே சாந்தமூர்த்தியினருகில் வந்து மண்டியிட்டுத் தலை வணங்கி சேவித்து "ஐயா! என்னை முழு மனத்துடன் தாங்கள் மன்னிக்க வேண்டும். என்னுடைய வாழ்க்கையின் ரகஸியங்கள் முற்றும்

தங்களுக்குத் தெரியும் என்பதை நானறிவேன். நான் இவ்விதம் வாய் திறந்து கேட்பதற்குக்கூட அஞ்சி நடுங்கியபடியே கேட்கிறேன்.

தங்கள் தர்ம பத்தினியாரின் தேக நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்று கேள்விப் பட்டேன். பார்க்கவேண்டுமென்று மனம் பதறியது. ஆனல்...நான் நிர்ப்பாக்கியவான். இப் பிறவியில் எதற்கும் கொடுத்து வைக்காத பாவி. நான் ஆறுமாத காலம் ஓய்வு எடுத்துக்கொண்டு வெளியூருக்குச் செல்கிறேன். நான் சில மாதங்களாக கருணநந்த ஸ்வாமிகளிடம் பக்தி கொண்டு உபதேசம் பெற்று வருகிறேன். அவரிடமே நான் இப்போது சென்று அவருடன் தேச சஞ்சாரம் செய்துவிட்டு வரப்போகிறேன். போவதற்கு முன்பு தங்களனுமதி பெற்றுப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். க்ஷமிக்கவேண்டும்.

தங்களுக்கு இத்தகைய தீங்கிழைத்துவிட்ட தீயர்களின் செய்கையை நான் அறவே வெறுத்துத் தான் கடைசி நிமிடத்தில் தேர்தலிலிருந்து விலகிக்கொண்டேன். நான் நின்றதே பிசகு. ஏன் நின்றேன் என்று பலநாளும் வருத்தப்பட்டேன். யார் யார் விதியை யார் கண்டது? வினச காலத்திற்குத் தான் விபரீத மதியுண்டாகிவிட்டது....அந்த சனி கிடக்கட்டும். இபபோது தங்களுடைய கால் எப்படி இருக்கிறது? கிருஷ்ணுவின் உடம்பு எவ்விதமிருக்கிறது?'' என்று வெகு பணிவாகக் கேட்டான்.

அதுபரியந்தம் வெகு மவுனமாகவே உட்கார்ந்திருந்த சாந்தமூர்த்திக்கு இவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் காதில் விழும்போது அவனையறியாது வேதனை செய்கிறது. தான் என்ன பதில் கூறுவது, எவ்விதம் நடப்பது என்றதே மறந்துவிட்டது. இவனுடைய நிலைமை கேவலமாகிவிட்டது. சீச்சீ...இத்தனை மனம் நொந்து நம்மிடம் வந்திருப்பவனை நாம் இன்னும் மனத்தைப் புண்ணுக்குவது சரியல்ல. இவைகளெல்லாம் மனிதச் செயலல்ல; தெய்வச் செயல். நாம் சாந்தத்தை இழக்கக்கூடாது. அவளும் பிழைப்பாளோ, போவாளோ என்ற நிலைமையிலிருக்கையில்

இப்போது த்வேஷங் காட்டுவதில் அர்த்தமே இல்லை......பொறுப் போம்...பொறுமை என்றும் சிறுமைப்படாது. பெருமையே தரும்' என்று தனக்குள் பலவிதமாக எண்ணியவனாய் ஒரு முடிவுக்கு வந்தான்.

ப்ரகாசத்தின் கையைப் பிடித்துத் தூக்கி பக்கத்து ஆசனத்தில் அமரச் செய்து பின் "நண்பரே!......இதென்ன இது? இம்மாதிரி தாங்கள் அதிகமாக ஏதும் பேசவே வேண்டாம். எல்லாவற்றிற்கும் காரணம் நான்தான். என் விதிப்படிக்கு யாவும் நடக்கிறது. அதனால் பிறரை நோவதில் பலனென்ன இருக்கிறது......கிருஷ்ணுவுக்கு உடம்பு அப்படித்தானிருக்கிறது. போய் பார்த்து விட்டு வாருங்கள். என் தலைவிதியின் கூற்று இன்னும் என்னென்ன சோதனைக்குள்ளாக்கப் போகிறதோ!...லதா...மாமாவை உள்ளே அம்மாவிடம் அழைத்துக் கொண்டு போம்மா" என்றான்.

லதா ஒரு துள்ளுத் துள்ளி சந்தோஷத்துடன் ப்ரகாசத்தின் கையைப்பிடித்து இழுத்தபடியே..."வா மாமா...வா...வா...அம்மா உள்ளே இருக்கா." என்று கூப்பிட்டாள். ப்ரகாசம் பழக்கூடையை சாந்தமூர்த்தியின் முன்பு வைத்து விட்டு "இதை தயவு செய்து அங்கீகரிக்க வேண்டும். தாங்களும் கூட வாருங்கள்". என்றான். "பரவாயில்லை. எனக்கு நடப்பதற்கு மிகவும் சிரமமாக விருக்கிறது. நீங்களே போங்கள் இந்த மனித சாக்ஷியினால் ஒன்றுமே உபயோக மில்லை. தெய்வ சாக்ஷி யொன்று உண்டு என்பதை மக்கள் மறவாம லிருந்தால் போதும்" என்றான்.

அதற்கு மேல் ப்ரகாசம் ஏதும் பதில் சொல்லாமல் லதாவுடன் உள்ளே சென்றான். உள்ளே கட்டிலில் படுத்திருக்கும் கிருஷ்ணகுமாரிக்கு ப்ரகாசம் வந்திருக்கிறான் என்ற விஷயம் தெரிந்ததும் அவளுக்கு உண்மையில் பயமே உண்டாகி விட்டது. தன் கணவன் முன்பு முதல் முதல் இன்று தான் இவன் வந்திருக்கிறான், என்ன விபரீதம் நடக்குமோ! என்ன கோபம் வருமோ! என்று பயந்து கொண்டிருக்கையில் இங்கு நடந்த சம்பவத்தை அறிந்ததும் அவள் மனமே பதறியது.

தான் நினைத்ததற்கு மாறாக சாந்தமூர்த்தியின் சாந்தமும், பொறுமை நிறைந்த குணத்துடன் கூடிய நடத்தையின் அழகும் இவள் மனத்தை உருக்கி விட்டன. அதே சமயம் ப்ரகாசம் உள்ளே வந்தான். கிருஷ்ண தைரியத்துடன்...“ப்ரகாசம்!...வாருங்கள்... உட்காருங்கள். சௌக்யந்தானே”...என்றாள். ப்ரகாசம் தலையை அசைத்துப் பதில் கூறி மவுனமாக நின்றான். பிறகு சற்று சமாளித்தவனாய் “உடம்பு எப்படி இருக்கிறது? நடந்த சகல விஷயங்களையும் கேள்விப் பட்டேன். இந்த மாதிரி அக்ரமங்கள் எந்த காலத்திலும் நடந்திராது.........ஊம்.........எல்லாம் வேளையின் கூற்று. இப்போது உனக்கு யார் வைத்தியம் செய்கிறார்கள்?” என்றான்.

கிருஷ்:—வைத்தியமா! பகவான்தான் செய்கிறார். இனி வைத்திய மேது மண்ணேது? எல்லாம் பார்த்தாகி விட்டது. பெற்றவர்களாலும், பிறந்தவர்களாலும் உண்டாகிய லாபங்கள் தான் உனக்குத் தெரியுமே...நாங்கள் சோத்திற்கும் ஏங்கி சாக வேண்டுமென்று அம்மகானுபாவர்கள் செய்த சதியில் இன்னும் பெரிய வைத்தியம் வேறெ வேண்டுமா!

கிருஷ்ணகுமாரியின் வார்த்தை ப்ரகாசத்தின் மனத்தைத் துளைத்தது. தான் என்ன பதில் கூறுவது? ஒன்றும் தோன்றவில்லை. அவளுடைய கேவலமான கண்ராவி நிலைமையைக் கண்டு சகிக்கக் கூடாது துக்கம் தொண்டையை அடைத்து விட்டது. இவளைப் பார்த்தால் இனி பிழைக்கும் மார்க்க மிருப்பதாகவே காணப்படவில்லை. என்ன பரிதாபம்......என்ன கோரம்!” என்று தனக்குள் எண்ணி அதே யோசனையுடன் இடிந்து போய் விட்டான். பதிலே பேச முடியவில்லை.

சற்று நேரம் மவுனமாக இருந்து பின்னர் “சரி...நான் போய் வருகிறேன். உடம்பை ஜாக்ரதையாகக் கவனித்துக் கொள்ளு. பகவான் இருக்கிறார்...இனி நாம் செய்யப் போவது என்ன இருக்கிறது? உன்னுடைய நிலைமையை என்னால் பார்க்கவே முடியவில்லை. கடைசிதரமாகப் பார்த்து விட்டுப் போகலா மென்று வந்தேன்.

நான் போய்வருகிறேன்'' என்று ஏதோ ஒரு பித்து பிடித்தவன் போல் கூறிக் கொண்டே எழுந்து விட்டான்.

கிருஷ்ணகுமாரிக்கும் அதற்குமேல் எதுவும் பேச மனோ நிலைமை தேக நிலைமை இரண்டும் இடங் கொடுக்கவில்லை. இழுப்பு வந்து விட்டது. அந்த கோராமையைக் காண மனம் தாங்காது தவித்தவாறு தலையில் கையை வைத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டான். சாந்தமூர்த்தியைப் பார்க்க மிகவும் பரிதாபமாகவே இருந்தது. விசனமும், மனக்குழப்பமும் நிறைந்தவனாய் உட்கார்ந் திருந்த சாந்தமூர்த்தியை நோக்கி "நான் சென்று வருகிறேன்; இதை என்னடையாளமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறிக் கொண்டே ஒரு கவரை நீட்டினான்.

அதற்குள் ரூபாய் தானிருக்குமென்பது சாந்தமூர்த்திக்குத் தெரியுமாதலால் அவன் அதை வாங்க இசைவானா?...அவன் மனந் தான் இடங் கொடுக்குமா! "ஐயா! இவைகளெல்லாம் ஒன்றும் வேண்டாம்...கடவுளின் கருணை இருக்குமாயின் கால் வயிற்றுக் கஞ்சிக்குப் பஞ்சம் செய்யமாட்டார். தாங்கள் இதை யோர் வித்யாச மாக எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று கண்ணியமாயும், கம் பீர த்வனியுடனும் கூறினான்.

அதற்குமேல் ப்ரகாசத்தினால் பதில் பேசவே முடியவில்லை. லதாவையும் மற்ற குழந்தைகளையும் அணைத்துப் பல தரம் முத்த மிட்டான். குழந்தைகளுக்குக் கொண்டு வந்திருந்த பரிசுகளை எல் லாம் கொடுத்து விட்டு விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான். சாந்தமூர்த்திக்கு ஒன்றுமே தோன்றவில்லை ஏதேதோ எண்ணங் களும் மனக் குழப்பமும், ப்ரகாசத்தின் முடிவும், தன் கதியும், தன் குடும்பத்துக்கு நேர்ந்த விதியும், கிருஷ்ணகுமாரியின் நிலைமையும் அவள் பிறந்த வீட்டிற்கு நேர்ந்த விபத்தும் ஒன்றன்பின் ஒன்றாக அவன் ஞாபகத்தில் சக்கரம் போல் சுழல வாரம்பித்தன.

எல்லாம் காலத்தின் கோலம். "எட்டு வருடங்களுக்கு முன்பு இதே தென்னந்தோப்பில் இதே நேரத்தில் வெகு சந்தோஷமாயும்

ஆநந்த ரூபியாயும் அமர்ந்து வேலைக்காரர்களை விட்டு இளநீர் பறிக்கச் செய்து எல்லோருடனும்...முக்யமாக என்னுருயிர் பெற்றோர்களுடன் சாப்பிட்ட காலம் கனவின் உணர்ச்சிபோல் மறைந்து போய் இப்போது இன்னிமிடம் நொண்டியாகி காண்போர் நகைக்கும் வகையில் இருக்கும் விதிதான் ப்ரகாசமாகத்தெரிகிறது...... அடடாடா...என்ன காலச் சக்கரத்தின் வேகம்!'' என்று அதே எண்ணங்களில் அலைபட்டுக் கொண்டிருந்தான்.

கிருஷ்ணகுமாரியும் ஒன்றுமே தோன்றாமல் குழம்பிப் போய் விட்டாள். குழந்தைகள் மட்டும் பழங்களையும் மற்ற தின் பண்டங்களையும் உத்ஸாகமாக உண்டு களித்தார்கள். பகல் 2 மணி சுமாரிருக்கும். அதே தென்னந் தோப்பில் மீண்டும் ஓர் மோட்டார் வரும் ஓசை கேட்டது. சிவப்ரகாசந்தான் திரும்பி வந்து விட்டான் என்று எண்ணிக் குழந்தைகள் முன்போல் வீதியில் வந்து வழி பார்த்துக் கொண்டு நின்றார்கள். சாந்தமூர்த்தி உள்ளே கட்டிலில் படுத்திருந்தான். மோட்டார் ஓசையைக் கேட்டு அவனுக்கும் வியப்பாகவே இருந்தது ஆனால் வீதியில் வரவில்லை.

மோட்டார்கார் தோட்டத்தின் வாயிலில் வந்து நின்றதும் அதிலிருந்து வசந்தகுமாரி இறங்குவதைப் பார்த்ததும் குழந்தைகளின் ஆச்சரியத்திற்கோர் எல்லையே இல்லை. 'அன்னிக்கி நமக்கு ரூபா கொடுத்தாளே அவள் தான் வந்திருக்கா!' என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டு அருகில் போகாது, சற்று தூரத்திலேயே நின்றார்கள். சிறு பையன் மட்டும் காரின் அருகில் சென்று வஸந்த குமாரியைப் பார்த்து நகைத்துக் கொண்டே "எங்கம்மாவுக்கு உவ்வா...உள்ளே படுத்துண்டிருக்கா...வா...உல்லே போலாம் வா' என்று கூறியழைத்தது.

இதற்குள் லதாவும், அம்பியும் உள்ளே ஓடிப்போய் "அம் மாம்மா!...அன்னிக்கி ரூபா குடுத்தாளே ... ஒரு மாமீ ... அவ வந்திருக்கா...என்று அவசர அவசரமாகக் கூறிவிட்டு சாந்தமூர்த்தியிடமும் ஓடித் தெரிவித்துவிட்டு மீண்டும் வாசலுக்கே வந்தார்கள். வசந்தகுமாரிக்கு வண்டியிலிருந்து இறங்கும்போதே ஒரு விதமான

திகிலும், மார்பு படபடப்பும் உண்டாகிவிட்டன. இந்த தோப்பையும், இச் சிறு குடிசை வீட்டையும் பார்த்ததும் ஓர் ரிஷியின் ஆச்ரமம் போன்றும், தபஸ்விகள் வாசம் செய்யும் ஏகாந்த ஸ்தலம் போன்றும் தோன்றியது.

தான் எப்படி குடிகாரனும், வெறிபிடித்தவனுமாகிய சாந்தமூர்த்தியின் முகத்தில் விழிப்பது? சாந்தமூர்த்திக்கு நேர்ந்துள்ள விபத்தின் க்ஷாத்திரத்தால் என்ன சொல்லி விடுவானே, செய்து விடுவானே'' என்ற ஒருவிதமான திகிலும் அவனிடம் வெறுப்பும் ஒரு புறம் தோன்றிக்கொண்டே இருந்தது. இத்தனை வருடங்கள் கழித்து கடுமையான படுக்கையுடன் இருக்கும் கிருஷ்ணாவின் கண்ராவியை எங்ஙனம் கண்டு சகிப்பது?'' என்றெல்லாம் யோசித்தபடியே இருக்கையில் சிறிய குழந்தை ஓடிவந்து காலைக் கட்டிக் கொண்டதும் அவளுக்கு ஆநந்தம் பொங்கிவிட்டது.

உடனே குழந்தையை ஆவலுடன் தூக்கிக் கொண்டு குழந்தை காட்டிய வழியோடு உள்ளே சென்றான். எதிரில் வந்த பெரிய குழந்தைகளும் இவளுடன் பின்னாலேயே சென்றார்கள். சாந்தமூர்த்திக்கு வருவது யார் என்று தெரியாமையினால் தன்னுடைய நொண்டிக் காலுடன் வெளியில் வருவதற்கு அஞ்சியவாறு, அப்படியே இருந்து எட்டிப் பார்த்தான். அப்போதுதான் வஸந்தகுமாரி வெளிப் பழகத்து நடையைக் கடந்து உள்ளே சென்றாள். இந்த எதிர்பாராத—கனவிலுங்கருதாத—வஸந்தகுமாரியின் வருகையைக் கண்டதும் சாந்தமூர்த்தி தன் கண்களையே நம்பாமல் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தான்

வஸந்தகுமாரி தான் என்பது விளங்கிவிட்டது. "இதென்ன வேடிக்கை!......இவளா தான் கிருஷ்ணகுமாரியுடன் படித்த சிநேகிதை என்று கூறினாள்! இவளா அன்று குழந்தைகளிடம் நோட்டுகளைக் கொடுத்தாள். என்ன ஆச்சரியம்!''......என்று அப்படியே திகைத்துப் போய் விட்டான். கிருஷ்ணகுமாரியும் தன்னறையின் வாசற்படியண்டையில் வரும்போதே வஸந்தகுமாரியைப் பார்த்து விட்டாள் "ஹா......வஸந்தா......வஸந்தா......என் கண்மணி!

வஸந்தகுமாரி!......நான் காண்பது உண்மையான தோற்றமா...... என் கண்கள் உண்மையில் பாக்கியத்தைக் செய்தவைகளா?''...... என்று பித்துப் பிடித்தவள்போல் கதறிக் கொண்டே வாஞ்சையின் ஆவேசத்தினுல் தன்னை மீறிய பலத்துடன் கட்டிலிலிருந்து எழுந்து தள்ளாடிய படியே ஓடி வந்தாள்.

வஸந்தாவின் நிலை தடுமாறிவிட்டது. "கிருஷ்ணு......... கிருஷ்ணு......என்னைப்போல் பாவிகள் உலகிலேயே இருக்க மாட்டார்கள்......என்னை மன்னிப்பாயா?......என் செல்வச் சோதரி... ...என் கண்ணுன கிருஷ்ணு! நம்மிருவருடைய அன்பிற்கிடையே பெரும் பகை என்ற பூகம்பம் வந்து நம் வாழ்க்கையையே சிதற வடித்து விட்டது......என் மூளையே சுழல்கின்றது......ஹா!''... என்று கதறிய படியே கிருஷ்ணுவைத் தழுவிக்கொண்டு வந்து கட்டிலில் கிடத்தி அவள்மேல் சாய்ந்தாள். இருவரும் தம் சுய உணர்வை இழந்தார்கள்: குழந்தைகளும் இக்காட்சியைக் கண்டு ஒன்றும் விளங்காமல் ப்ரமித்துப் போய்விட்டன......சாந்தமூர்த்தியும் கல்லாய் விட்டான்.

---


# ராதாமணி

கணவரின் நிழல் போலுள்ள உத்தம மனைவியின் வாழ்க்கையும், உயர்ந்த காதலர்களின் மாட்சியும், விலைமகளாகப் பிறந்தும் விலையற்ற குணத்தினுல் பெருமையுற்று விளங்கும் அம்புஜத்தின் அருமையான ஜீவியமும், விலைமகளின் லீலையால் அன்யோன்ய தம்பதிகளின் சிதறலும், நேரில் விஷயமறியாது பிறர் சொல்லைக் கேட்டுச் சந்தேகிப்பதால் விளையும் தீமையும், இன்னும் அளவிலாத அநேக சாரங்களைக் கொண்ட துப்பறியும் நாவல்.

3-ம் பதிப்பு விலை ரூ. 2-8

## 15-வது அதிகாரம்

### ப்ரேமையின் ஜோதி—பைசாசத்தின் அநீதி

அணை கடந்த அன்பின் வெள்ளத்தில் மூழ்கிக் கரை காணுது சுழலும் சகோதரிகளைப் பார்த்த தணிகாசலத்திற்கு இன்னதெனக் கூறத் திறமற்ற ஆநந்தமும் அதன் வேகத்தினுல் கண்ணீரும் பெருகிவிட்டது. "சின்னம்மா!...கொழுந்தே...உன் முகத்தைப் பார்த்து எத்தனை காலமாய்விட்டது. நம்ப குடும்பத்திற்கு வந்த சாபக்கேடுதான் என்ன விபரீதமாகிவிட்டது? மாப்பிள்ளை ஐயா எங்கே?" என்று பேசமாட்டாது கூறிக் கண்ணீர் விட்டான்.

சில நிமிட நேரங்கள் சகோதரிகள் கண்கள்மட்டும் குளம் போன்று நிறைந்த நீருடன் ஒருவரையொருவர் பார்க்கிருர்களே யன்றிப் பேசுவதற்கு வாயே அஸடத்துவிட்டது. பிறகு சற்று சமாளித்தவளாய் வஸந்தகுமாரியே பேசத்தொடங்கி "கிருஷ்ணு!...நாம் இம் மாதிரி ஒருவரோடொருவர் பேசி எத்தனை வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. நம் வாழ்க்கையின் சக்கரம் எத்தனை விதக் கோணலுடன் சுழன்றுவிட்டது.

ஆகா! இப்போதுதான் நீயும் நானும் விளையாடுவதுபோலும் ...பாடுவதுபோலும்...படிப்பதுபோலும்...தோன்றுகிறது. இதற்குள் நம்முடைய மனத்திலிருந்த சந்தோஷமே, மறைந்து பெற்ற தாயும் இறந்து...தந்தையும் சுபுத்தி இழந்து...எல்லாம் சின்ன பின்ன மாகிவிட்டதை நினைக்க நினைக்க சகிக்கவே முடியாது போய் விட்டது...என்ன உலக விநோதங்கள்!" என்று கூறி முடிப்பதற்குள்

கிருஷ்ணகுமாரி சற்று தேர்ச்சி பெற்று "என் ப்ரிய...வஸந்து ...நம் மிருவருக் கிடையிலும் அடிக்கும் கொடிய பகைமையாகிய

புசல் காற்றில் நீ எப்படி தப்பி இங்கு வந்தாய் என்பது எனக்கு வியப்பிலும் வியப்பாக விருக்கிறது. அம்மா எப்படி இறந்தார்கள்? அம்மாவின் அந்திய காலத்தில் என்னைப்பற்றி ஏதாவது சொன்னார்களா! மகா பாவியாகிய என்னை மனத்திலாவது நினைத்தார்களா! உண்மையைக் கூறு...ஒளிக்காதே...என்றால்தான் நம் அருமைத் தாயார் இறந்தார்கள் என்று எனக்குத் தெரியும். அதை என் நெஞ்சறியும். இனி எதை யறிந்துதான் என்ன பயன்?'' என்று கண்ணீர் பெருக்கினாள்.

வஸந்தகுமாரிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை ஏனெனில் தன் தாயார் இறக்குந்தறுவாயில் கூறிய மொழிகளை அப்படியே கூறினால் இவளுடைய நிலைமை மிகவும் கேவலமாகிவிடும். ஆதலால் தத்கால சாந்தியாய் பொய் சொல்வதுதான் உசிதம் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு; "கிருஷ்ணா! நம் தாயார் இறந்த கண்ராவியைக் கேட்கவே கேட்காதே...அவள் முதலில் கீழே விழுந்த அக் கணமே முக்கால் பாக ஆவியும் ஒழிந்துவிட்டது. ஊமை ப்ராணன் பின்னும் சில மணி நேரங்கள் ஊசலாடிப் பின் மறைந்துவிட்டது. வாய் திறந்து எவ்வித வார்த்தையும் கூறவில்லை. ப்ராணன் பிரியும்போது நாராயணா! கோபாலா!... கிருஷ்ணா...சங்கரா......என்ற பகவன்னாமாவைக் கூறியபடியே அன்னை மறைந்தாள்.

அவள் உயிர் மறையும் அதே வினாடியில் வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்று பாடிக்கொண்டே ஒரு பிச்சைக்காரன் வந்தான். அந்த நிசி வேளைக்கும் பாடலின் அர்த்தத்திற்கும் அன்னையின் வாழ்வு மறைவதற்கும் மிகமிகப் பொருத்தமாய் முடிந்துவிட்டது. கிருஷ்ணா! இப்போதும் அதை நினைத்தால் கண் முன்பு தாண்டவமாடுகிறது என்று கூறி முடிக்குமுன் கிருஷ்ணா,

"என்ன! என்ன!! அந்த பிச்சைக்காரக் கிழவன் அந்த வீதியிலும் பாடினானா! ஆகா! இது ஏதோ ஒருவிதமான ஜீவ சக்திதான். அதே பிச்சைக்காரன் அன்னையின் முடிவையும் தெரிவித்துத் தானும் இறந்தான் (நடந்ததைக் கூறி) இம் மாதிரி சம்பவத்தைக்

கண்ணாரக் கண்டேன்...அந்த காட்சிச் சித்திரப் படத்தில்கூட வந்திருக்கிறதாமே....'' என்றாள்.

இதற்குள் வஸந்தா ஆவலுடன் ''ஐயோ! அந்த படத்தை நானும் பார்த்தேனே...அது நேரில் உங்கள் கண் முன்பு நடந்த விஷயமா...உன் புருஷனின் உருவம் அப்படியே இருந்ததைப் பார்த்தேன். அன்று குழந்தைகளை அதே நேரத்தில் பார்த்த சந்தோஷத்தில் படத்தைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை. என்ன அனியாயம் அந்த கிழவனை மனந்துணிந்து மோட்டாரை ஏத்திக் கொன்றுவிட்டான். என்ன நெஞ்சழுத்தமோ!'',..என்று பரிதாபப் பட்டாள்.

கிருஷ்:—வஸந்து! அப்பா எப்படி இருக்கிறார்?...குலசேகர னுக்கு விவாகமாகிவிட்டதாமே...பெண் நன்றாக இருக்கிறாளா?

வஸந்த:—அப்பாவின் கண்ராவியைப்பற்றிக் கேட்காதே...... அவரை வைத்துக்கொண்டு படும் கஷ்டம் கூறத் திறமன்று. அசல் பயித்தியமாகிவிட்டார். சதா உங்களைத் திட்டுவதைத் தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை. குலசேகரனின் நடத்தையே சில சமயம் பிடிக்கவில்லை. குடிப் பழக்கமும், ரேஸ் பழக்கமும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அந்தப் பெண்ணையும் தன் போக்காக மணந்து கொண்டான். நம் பந்துக்கள் பலருக்கும் இது பிடிக்காமல் தள் ளியே வைத்திருக்கிறார்கள். எல்லாம் சோதனை...உன் புருஷனின் கால் எப்படி இருக்கின்றது?...என்று வெறுப்புடன் கேட்டாள்.

கிருஷ்:—(சற்று சலித்தவாறு) இருப்பதென்ன. நொண்டி... முழு நொண்டியாகி மூலையில் உட்கார்ந்துவிட்டார். அந்த வெட் கக் கேடுகளை எல்லாம் கேட்காதே...என் தலையில் நானே மண்ணைப் போட்டுக்கொண்டு நம் தாய்க் குடும்பத்தையும் பாழாக்கிவிட்டேன். இந்த வயிற்றெரிச்சல் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தீராது— என்று ஒருவிதமான வெறுப்பும், வெட்கமும், துக்கமும் கலந்த தொனியுடன் கூறினாள்.

இந்த வார்த்தைகள் முற்றும் சாந்தமூர்த்தியின் காதில் சுறுக் கென்று நெருப்புத் தணல் விழுவதுபோல் விழுந்தன...கிருஷ்ண

குமாரியின் சலிப்பும் வெறுப்பும் அவன் இதயத்தையே பிளப்பது போல் தோன்றியது. காதலி!...உண்மைக் காதலி...உலகமே!...உன் வேடிக்கையின் லீலைகள்தான் என்னே...காதலியின் காதலித்த மனமே இப்போதைய நிலைமையும் ஊனமும் ஒன்றுகூடிய போது கசந்திடும் வேப்பங்காய்போ லாகிவிட்டதா! என்று மிக்க விசனத்தை யடைந்து தவித்தான். ஆனல் வராத மனுஷி வந்திருக்கும் வஸந்தா வைப் பார்க்கவும் விரும்பவில்லை. உள்ளோடு உள்ளாக உட்கார்ந் திருந்தான்.

வஸந்தகுமாரிக்கு நேரமாகிவிட்டதால் சீக்கிரம் போய்விட வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. பிரிந்தவர் கூடினல் பேச்சுக்கும் முடிவுண்டோ என்றபடி இருவரும் பேசிப் பேசி மகிழ் வதில் நேரஞ் செல்வதே தெரியவில்லை. குழந்தைகளை எல்லாம் எடுத்து;மாறி.மாறிக் குலாவினள்.“ கிருஷ்ணு! நான் ஒரு சினேகி தையின் வீட்டிற்குப் போய்வருவதாகச் சொல்லிவிட்டு வந்துவிட் டேன்...போனதெல்லாம் போகட்டும். நீ குழந்தைகளுடன் நம் வீட்டிற்கு வருகிருயா! நல்ல வைத்தியம் செய்துகொண்டு வரலாம்'' என்ருள்.

இது கேட்ட கிருஷ்ணகுமாரிக்கு ஆத்திரமும் விசனமும் பொங்கி எழுந்தன. “வஸந்து...என்னையா நீ இனி அங்கு அடி எடுத்துவைக்கக் கூப்பிடுகிருய்? ஐயோ! நினைத்தால் நெஞ்சம் பகீ ரென்கிறதே...நாயினும் கொடிய பாதகன். நாயை ஏவி என்னைக் கடிக்கச்செய்த பாதகனின் முகத்தில் விழித்துக்கொண்டு இனி நான் வருவதா! இல்லை...இல்லை...இந்த ஜென்மத்தில் இல்லை. நான் இப்ப டியே செத்தாலும் என் சவத்தையும் அவன் பார்க்கவேண்டாம். என்னுடைய பலவிதமான துரதிருஷ்டத்திலும் ஏதோ ஒரு சிறு அதிர்ஷ்டம் செய்திருந்ததால் உன் திருமுகத்தையாவது மீண்டும் பார்க்கப் பாக்யம் கிடைத்தது. இம்மட்டுமே போதும்.'' என்று கண்ணீர் வடியக் கூறி வஸந்தாவை இறுகத் தழுவிக்கொண்டாள்.

இதற்குமேல் வஸந்தகுமாரியின் மனம் பலவந்தம் செய்ய நாடவில்லை. தன்னை யவ்வாறு யாரேனும் செய்திருப்பின் தான்

அவர்களின் முகத்திலாவது விழிக்கச் சம்மதிக்க முடியுமா! என் பதை நினைத்துப் பார்த்தவளவில் மேலே பேசவே முடியாது போய் விட்டது. சற்று நேரந் தவித்தாள். நேரமோ கடந்துவிட்டது. ஆதலால் வீட்டின் எண்ணம் உண்டாகி வருத்தியது.“ கிருஷ்ணு! இனி நான் என்ன சொல்ல முடியும்? என்னை மீறிய ஆசை என்னை வதைத்ததால் திருட்டுத்தனமாக வந்து பார்த்துவிட்டேன். ஸ்வதந் திரமற்றவள். என்னிதயம் துடிப்பதைத் தவிர வேறு ஒன்றுமே எனக்குத் தெரியவில்லை. கடவுளே கதி. அதிக நேரமாகிவிட்டது; சென்றுவருகிறேன். இன்னும் நேரம் கடந்துவிட்டால் எனக்கு பெரிய ஆபத்தாக முடியும். நான் வரட்டுமா!?” என்று கண்ணீர் பெருகியவாறு கேட்டாள்.

கிருஷ் :—(தங்கையைப் பிரிய மனமே இல்லாமல் தவித்தவாறு அவள் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு) கண்மணீ! வஸந்தா! நீ மகா புத்திசாலி......விவேகி......இருந்தபோதிலும் எனக்குத் தோன்றுவதைக் கூறுகிறேன்......நீ நமது ப்ரகாசத்தைப் பரிதபிக்க விடாமல் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் மனப் பூர்வமாக விரும்புகிறேன். ஆதி ரகஸ்யங்கள் முற்றும் உனக்குத் தெரிந்திருக்கும் ......நீ என்ன பதில் கூறுகிறாய் ...... வீட்டில் என்ன சொல்லுகிறார்கள்...

வஸந் :—கிருஷ்ணு! வீட்டிலும் இதே பேச்சு ப்ரஸ்தாபங்கள் உண்டு......விவாக விஷயங்களில் மட்டும் உடனே தீர்ப்பான பதில் கூறிவிடுவதென்பது முடியாது. நான் யோசித்து சொல் கிறேன் ......... நான் வரட்டுமா ......... கூடுமானால் மீண்டும் வருகிறேன். கண்ணீர் விடாதே......கவலைப்படாதே......கடவுள் தான் கதி...என்று கூறி, ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து கிருஷ்ணுவிடம் கொடுத்தாள். குழந்தைகளை எல்லாம் கட்டித் தழுவி முத்தமிட்டாள். பிரிய மனமின்றிப் பிரிந்து வெளியில் வந்தாள்.

அத்தனை இளகிய மனதிலும் சாந்தமூர்த்தியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகவே இல்லை. அதைப்பற்றிக்

கேட்கவுமில்லை. திரும்பி வரும்போது எதிர்ப்பக்கத்து அறையில் விசனமே வடிவமாயும் மனக் கலக்கத்துடனும் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் அவன் நடக்கும் கட்டைகள் வைத்திருந்தன. கண்ணீர் பெருகியபடியே தலை குனிந்துகொண்டிருந்தான்.

வஸந்தகுமாரி தற்செயலாக அங்கு உட்கார்ந்திருந்த சாந்த மூர்த்தியைப் பார்த்துவிட்டாள். அவனைக் கடைசிதரமாகப் பார்த்து எத்தனையோ வருடங்களாகிவிட்டதால் அப்போது பார்த்த உருவத்திற்கும் இப்போது பார்க்கும் உருவத்திற்கும் எந்த விதத்தி லும் சம்மந்தமே இல்லாது யாரோ ஒரு தனித்த பிச்சைக்காரன் அல்லது ரோகிஷ்டன் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றியது. அவனைப் பார்க்கும்போது ஒரு பக்கத்தில் பழயபடி பொதிந்து கிடந்த வெறுப்பும், தற்சமயமுள்ள நிலைமையில் ஐயோ பாவமென் கிற பச்சாத்தாபமும் மனத்தில் எழுந்தன.

முன்னே சொல்லவேண்டிய கால்கள் தானகத் தடைபட்டு நின்றுவிட்டன. ஒரு இமைகொட்டும் நேரம் தம்பித்துப் பார்த்தாள். சாந்தமூர்த்தி தலை நிமிரவே இல்லை......மாமா......என்று வாய் விட்டு வஸந்தா அழைத்துவிட்டாள். சாந்தமூர்த்தி தலை நிமிர்ந்து பார்த்தான் மறு வினடியே வெறுப்பும், வெட்கமும், அலக்ஷியமும், ஆத்திரமும் கலந்த பார்வையுடன் சடக்கென்று தலையை யசைத்துத் திருப்பிக்கொண்டான்.

அதேசமயம் ஹேமலதா சாந்தமூர்த்தியிடம் ஓடி “அப்பா! ...இவதான் எங்களுக்கு அன்னிக்கி பணங் கொடுத்தா......இவ எங்க சித்தின்னு அம்மா சொன்னுப்பா”......என்ருள். சாந்த மூர்த்தியின் தலையும் நிமிரவில்லை; வாயும் திறக்கவில்லை. வஸந்த குமாரிக்கு இவன் செய்கை மிகவும் மனக்கசப்பைக் கொடுத்ததால் விற்றென்று போய்விட்டாள். வண்டியில் காத்திருந்த தணிகாசலம் “அம்மா! மாப்பிள்ளை ஐயாவைப் பார்த்தீர்களா! அவருடைய கண்ராவியைக் கண்டு சகிக்கவே முடியவில்லை”...என்று கேட்டான்.

வஸந்தா சற்று அலக்ஷ்யமான த்வனியில் “எது எப்படி இருந்தாலும் தன்னுடைய சோதாக் குணமும், திமிர் படைத்த

செய்கையும் விடவில்லை...... எல்லாம் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். இந்த புண்ணியவானை மணந்ததாலல்லவா எங்கள் குடும்பமே அதோகதியாகிப் பாழாகிவிட்டது. கிருஷ்ணகுமாரியைப் பார்த்தால் அவள் பிழைக்கும் நிலைமை சற்றும் காணப்படவில்லை......என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை......... சரி......சரி......வண்டியை வேகமாக விடு......நேரமாகிவிட்டது... என்றாள்......வண்டியும் மான் வேகமாகப் பறக்க வாரம்பித்தது.

நடுக் காடு போன்ற வழியில் வண்டி வந்துகொண்டே இருக்கையில் சற்று கண்ணுக்கு இருட்டும் நேரமாகிவிட்டது. வஸந்தகுமாரிக்கு மட்டும் உள்ளூற பயம் உதைக்கிறது. அண்ணன் என்ன திட்டுவானோ!...வீட்டில் என்ன ரணகளமாக நடக்குமோ! வென்று பயந்துகொண்டே வருகையில் இவர்களின் மோட்டாரின் டயர் பட்டார் என்று காத்து வெடித்து பங்க்சராகிவிட்டது. கண்டு மனமிடிந்துபோய் "ஐயோ! என்ன செய்வதென்று தவிக்க வாரம்பித்துவிட்டாள். தணிகாசலத்திற்கும் பயம் அதிகரித்துவிட்டது. ஒருநாளும் இல்லாமல் திருநாள் போல் திருட்டுத்தனமாக அழைத்துவந்த இடத்தில் இம்மாதிரியும் விபத்து நேரவேண்டுமா வென்ற திகில் பிடித்துவிட்டது. மெல்லிய குரலால் வஸந்தா "தணிகாசலம்...இப்போது நாம்என்ன செய்வது! இதற்கு வேண்டிய ஆயுதங்கள் எல்லாம் கையிலிருக்கிறதா! எத்தனை நாழியாகும்?" என்று சலிப்புடன் கேட்டாள்.

தணிகாசலம் வருந்தியபடியே..."அம்மா! எல்லாம் இருக்கிறது. என்னால் கூடிய சீக்கிரத்தில் முடித்துவிடுகிறேன். இதனால் வீண் தாமதமன்றோ ஆகிறது!" என்று கூறிக்கொண்டே ரிப்பேர் செய்ய வாரம்பித்தான்.

அச்சமயம் அந்த பக்கம் வந்த ஓர் மோட்டார் வண்டியிலிருந்தவர்கள் இக்கார் இங்கு நிற்பதைக் கண்டதும் வழக்கமாக விசாரிப்பதுபோல், என்ன வேண்டும்...என்ன கெட்டுவிட்டது? என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து நிறுத்தினார்கள். வந்த வண்டிக்குள் நடுவில் குலசேகரன் உட்கார்ந்திருந்தான். இரு பக்கத்திலும் இரண்டு ஆங்கிலோ இந்திய ஸ்திரீகள் உட்கார்ந்து குலசேகரனின்

தோள்மீது கைகளைப் போட்டுக்கொண்டு கொம்மாளமடித்துக்கொண்டிருப்பதை வஸந்தகுமாரி பார்த்துவிட்ட உடனே தலைமேல் இடி இடித்ததுபோலாகிவிட்டது.

குலசேகரன் தன்னுடைய மாறுபட்டமான நிலைமையில் எதிர் காரையோ, காரிலிருப்பவர்களையே கவனிக்கவே இல்லை. ட்ரைவர் மட்டும் இந்த காரையும் தணிகாசலத்தையும் பார்த்த உடனே திடுக்கிட்டவனாய் "என்னடா செய்தி......உன் காரா......இங்கு நிற்கிறது .....சாமீ!......நம்ப சின்னம்மாள் கார்தான் நின்றுவிட்டது. தணிகாசலந்தான் இருக்கிறான்......என்று கூறிவிட்டான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டபிறகே குலசேகரன் நினைவு பெற்றவனாய்...அலறியபடி "என்ன...என்ன...சின்னம்மாளின் காரா... என்று கூறிக்கொண்டே கண்களில் நெருப்புப்பொறி பறக்க இறங்கினான். இவனுடைய ஆவேசமான நிலைமையைப் பார்க்கும்போதே வஸந்தகுமாரியின் மனம் கொதித்துப் பயத்தால் நடுநடுங்கிவிட்டது.' "இந்த நேரத்தில் நீ எங்கே போய்விட்டு வருகிறாய்?......அடேய் தணிகாசலம்! ...... உண்மையைக் கூறுவிட்டால் கொன்றுவிடுவேன்." என்று கூறியபடியே தணிகாசலத்தின் கையைப் பிடித்து இழுத்தான்.

இந்த சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த வஸந்தகுமாரி தன்னை மீறிய துணிபுடனும் ஒருவிதமான அலக்ஷ்யத்துடனும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி "போதும்......போதும்...... நிறுத்து உன் அதிகாரத்தை. உன்னைப்போல் நான் துன்மார்க்கச் செயலுக்குச் சென்று நாணங் கெட்டுத் திரும்பவில்லை. என்னை இதுபரியந்தம் நீ சிறை வைத்திருந்தது போதும். இனி உன்னதிகாரம் வேண்டாம்......அவரவர்களின் அறிவும் ஆற்றலும் அனுபவமும் அவரவர்களைக் காக்கும்...என் உன்னிடம் ஒளிப்பதேன்? உன்னுடைய மூர்க்கத்தனத்தினால்தான் கிருஷ்ணகுமாரியின் கதி அதோகதியாகிவிட்டது. அந்த வயிற்றெரிச்சலைக் கண்டறிந்தபின்னுமா உன்னிடம் பயந்து சாகவேண்டும்? அவளைப் பார்ப்பதற்காகத்தான் சென்றேன்...அவளுடைய பரிதாபத்தைப் பாவி நான் கண்ணாரக் கண்டுவிட்டுத்தான் இதோ வருகிறேன்...

என்று கூறி முடிப்பதற்குள் குலசேகரன் சீறிவிழுந்தவாறு "ஆஹ்ஹா!...உனக்கு இத்தனை கர்வமும், அகம்பாவமும் பிடித்து விட்டதா!" என்று கூறிக்கொண்டே வஸந்தகுமாரியின் தலைமயிரைப் பிடித்து உலுக்கி பளீரென்று ஓரடி விட்டுக் கீழே தள்ளினான். ஆ...வென்று வீறிட்டவாறே வஸந்தகுமாரி ப்ரக்ஞையை இழந்தாள். வண்டியோட்டி நடுநடுங்கிவிட்டான்.

## 16—வது அதிகாரம்

### குற்ற மறிந்த வனிதை—முற்றும் வியக்கும் சரிதை

சில தினங்களாகவே குலசேகரனுடைய நிலைமையும், நடத்தையும் மிகவும் மாறுபட்டுக் கொண்டே வருவதை அறியாத வஸந்தகுமாரிக்கு இச் செய்கை பெரும் வியப்பையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. அவள் கீழே விழுந்த கோரத்தைத் தணிகாசலத்தினால் கண்டு சகிக்கவே முடியவில்லை. வெகு காலமாக இவன் அவ் வீட்டில் தாராளமாகப் பழகும் ஸ்வதந்திரம் பெற்றவனாகையினால் வஸந்தகுமாரியை குழந்தையைப்போல் தூக்கி வண்டியிலேயே கிடத்தினான்.

சற்று நேரத்தில் தெளிவு பெற்ற வஸந்தா "தணிகாசலம்... அப் பாவிகள் போய்விட்டார்களா! வண்டி போக முடியுமா, முடியாதா!" என்று ஹீனமான குரலுடன் கேட்டாள். தணிகாசலமும் விசனத்துடன் "அம்மா! ஈ விரக்கமற்ற நெஞ்சுடையவர்களை இவ் வுலகத்தில் வேறு எங்கேயும் பார்த்ததில்லை. மகா கொடிய பாவி என்றாலும் தகும்...அவர்கள் போய்விட்டார்கள். வண்டி இன்னும் சற்று நேரத்தில் கிளம்பிவிடும்...தைரியமாக இருங்கள்." என்று கூறிவிட்டு வண்டியை சரிப்படுத்த வாரம்பித்தான்.

சுமார் அரை மணி நேரத்தில் வண்டி தயாராகிப் புறப்பட்டு விட்டது. இரவு வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அச் சமயம் அவள் அண்ணனின் மனைவி தன் னறையில் ஒரு மாதிரியான நிலைமையில் படுத்திருந்தாள். வஸந்தகுமாரி விசனமும் ஆத்திரமும் கொண்ட நிலைமையில் வந்து, ஆகாரமும் கொள்ளாது நேரே தன் னறையில் சென்று படுத்துக்கொண்டாள்.

வேலைக்காரக் கிழவி இவளைச் சாப்பாட்டிற்கு அழைத்தும் வரவில்லை. அன்று முற்றும் வஸந்தகுமாரியின் விசனமும் மனக் கொதிப்பும் கூறத் திறமில்லை. மறு தினம் காலையிலும் குலசேகர னின் மனைவி மிகவும் விசனத்துடன் படுத்திருந்தவள், வஸந்தாவும் ஏன் இவ்விதமிருக்கிறுள் என்று விசாரிக்க ஒரு நாளு மின்றித் திரு நாளைப்போல் வந்து "என்ன வஸந்தா! ஏன் இம் மாதிரி இருக்கி ருய்...இரவு நீகூடச் சாப்பிடவில்லையாமே!"...என்ருள்.

இம் மாதிரி விசாரிப்பது இதுவே முதல் தடவை யாதலால் வஸந்தாவுக்குச் சந்தோஷம் அதிகரித்துவிட்டது. "என்ன இது... மன்னீ...நீகூட என்னை விசாரிக்க வந்துவிட்டாய்!...நீ ஏன் இம் மாதிரி இருக்கிருய்?"...என்று கேட்டாள்.

அப் பெண்மணி மன வெறுப்புடனும், ஒருவிதமான சலித்த பார்வையுடனும் பேசத் தொடங்கி "வஸந்தா! நான் இனி அதிக நாள் உலகத்திலிருக்கமாட்டேன். சில தினங்களுக்கு முன்புவரை யில் மதம் பிடித்த யானையைப் போலத்தான் உலகத்தையே அறி யாது இருந்தேன். அன்று அந்த...திடீரென்று மேலே கூருது நிறுத்திவிட்டு மனம் பதறிப் பயந்தவளாய் திகைத்துவிட்டாள்.

இதைக் கண்ட வஸந்தா "மன்னீ!...மன்னீ! ஏன் இப்படி விழிக்கிருய்! என்ன செய்தி! என்ன சொல்லு" என்று கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள். அப் பெண்மணி மிரள மிரள விழித் துக்கொண்டே..."ஹா...வஸந்தா!...என்னிதயம் படபடத்து ஓடு கிறது. வாயினுல் கூறவே பயமாக இருக்கிறது...விஷயத்தை அறிந்த பின்னர் நீ எங்களை வெறுக்கமாட்டாயே...எங்களை இழி வாக நினைக்கமாட்டாயே!...வஸந்தா...நானும் உன் அண்ணனும் கொலைகாரர்கள்...மகா பாவிகள்...

வஸந்தா இடை மறுத்துக் கட்டு மீறிய ஆத்திரத்துடன் "என்ன! என்ன! கொலைகாரியா...அண்ணன் செய்தானு...ஐயோ... எனக்கு விளங்கவில்லையே....விளங்கச் சொல்லு...யாரைக் கொலை செய்தான்?" என்று பதறியவாறு கேட்டாள்.

சக்குபாய்:—வஸந்தா!...அன்று சித்திரக் காக்ஷியில் 500 ரூபாய் பரிசு பெற்ற படத்தைப் பார்த்தாயல்லவா...உன் தாயாருக்கு இழுத்துக்கொண்டிருக்கையில் உன் தமயனும் நானும் குடி வெறியில் தலை கால் தெரியாமல் சென்றபோது நடந்த கொலை...காரின் உள்ளே இருக்கும் சண்டாளர்கள் நாங்கள்தான்.

வஸந்த:—(துள்ளியவாறு) ஹா...பிச்சைக்காரக் கிழவன்மீது காரை ஏற்றிவிட்டது நீங்களா! ஐயயோ...என்ன கொடுமை...அப்போதே அது தெரியவில்லையா...

சக்கு:—ஆ.....வஸந்தா.....அப்போதே கிழவன் மாண்டது தெரிந்தும், குடியின் வெறியில் உணர்ச்சியே ஏற்படவில்லை. அன்று படத்தைப் பார்த்த உடனே அக் கொடிய கொலையின் பயங்கரத் தோற்றம் என் இதயத்தைக் கலக்கிவிட்டது. அன்று முதல் நான் என் மூளையையே இழந்தேன். ஏதோ பீதி என்னைச் சுற்றிக் கொண்டு வாட்டுகிறது. உன் அண்ணனும் நான் இப்படி மாறியதில் வெறுப்புற்று என்னையே திரஸ்கரித்து வேறு எங்கேயோ அலைவதாயும் நான் அறிகிறேன்...இனி எது எக்கேடு கெட்டாலென்ன? யார் எப்படிப் போனால் என்ன....கொலை கொலைதானே...அதை மாற்ற யாரால் முடியும்...என் வரையில் நான் புனர் ஜென்மமெடுத்தவளாகவே ஆய்விட்டேன். இனி என் முடிவைத்தான் கோருகிறேன். இக் கொலை செய்தது மட்டு மல்லாமல் உன் சகோதரியை நாயை ஏவி கடிக்கச் செய்தும், அவள் புருஷனின் காலை ஒடித்தும், செய்யத்தகாத அக்ரமங்களை எல்லாம் செய்த பெருமையைப் பிறகே உணர்ந்தேன். என்னால் சகிக்க முடியவில்லை...

வஸந்:—மன்னீ!...உனக்கு இத்தனை தெளிவான எண்ணங்கள் உண்டாகி இருப்பதைப்பற்றி நான் பரம சந்தோஷமடைகிறேன். என்னுடன் பிறந்த அண்ணனைவிட உன்மேல் என் மனம் இரங்குகிறது. இதோ...என் கன்னத்தில் விரல்களின் தழும்புகளையும் வீக்கத்தையும் பாரு.'' என்று காட்டியவாறு "மன்னீ! என் சகோதரியைச் செய்த கொடுமையினால் நான் மனம் பதறிப்போய் அவளைப் பார்த்துவிட்டு வருவதற்குச் சென்றேன். திரும்பி வருகையில்

மோட்டார் கெட்டுவிட்டதால் வழியில் நிற்கையில் அந்தப் பாவி சற்றும் பயம் கூச்சமின்றி இரண்டு சட்டைக்காரிகளை இரு புறமும் உட்கார வைத்துக்கொண்டு கட்டியணைத்தவாறு திமிர் பிடித்து வந்தான். என்னைத் திட்டி அடித்து அதட்டிவிட்டுப் போய்விட்டான்... உம்...விதி...யாவும் விதி...

சக்கு:—ஆ...சட்டைக்காரிகளா...ஆம்...ஏன் போகமாட்டார் ...என்னையும் முதலில் இம் மாதிரிதானே மயக்கி மணந்தார்... நானும் ஸ்திரீகளுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு...முதலிய எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுத் திரிந்ததால் உலகத்தையோ...நன்மை தீமைகளையோ அறியாது பாழாகிவிட்டேன்... என் பிறவியே இனி பாழ்தான்...வஸந்தா...நீ இனி சற்றும் யாருக்கும் பயப்படவேண்டாம்......குழந்தையும் குட்டியுமாக இப்படி கஷ்டப்படும் உன் சகோதரியை இனி காட்டிக்கொடுக்கவேண்டாம். அவளுடைய வாழ்க்கையை பாழ்படுத்தியது போதும். ஆபத்துக் காலத்திலும் உதவாவிட்டால் நம்மைப்போல் சண்டாளர்கள் இருக்கமாட்டார்கள்.

வஸந்தா...நீ ஏன் இந்த சிறைச்சாலையில் அடிமைபோல் அடைபட்டுச் சாகவேண்டும்? சிவப்ரகாசை மணந்துகொண்டு உன் சகோதரியையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதை விடாதே... இனிமேல் நான் யாருக்கும் பயப்படவோ, அடங்கி நடக்கவோ வேண்டாம்...உனக்கு நான் உதவி செய்கிறேன். நான் இங்கு பார்த்துக்கொள்கிறேன். உன் சகோதரியை நீ கட்டாயம் கவனித்து வா'' என்று ஆவேசத்துடன் கூறினாள்.

இந்த வார்த்தைகள் வஸந்தவல்லியின் எரிந்த பயிர்போன்ற மனத்தில் தண்ணீர் வார்த்ததுபோல் தோன்றியது. சக்குவைச் சேர்த்துத் தழுவிக்கொண்டாள். ''மன்னீ!...நான் என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. நான் கிருஷ்ணாவுக்கு இச் சமயம் உதவி புரியாவிடின் என்னிதயமே வெடித்துவிடும். நான் எப்படியும் நீ சொல்லியபடியே முடிவு செய்திருந்தேன். உன்னுடைய உதவியும் கிடைத்துவிட்ட பிறகு இனி என்ன குறைவு?'' என்று

அத்தனை விசனத்தின் மத்தியிலும் சற்று ஆறுதலும் சந்தோஷமும் அடைந்தாள்.

அன்று முற்றும் குலசேகரன் வீட்டிற்கே வரவில்லை. இவ்விரு பெண்மணிகளும் தூக்கமே பிடிக்காது தத்தளித்துக்கொண்டே இருந்தார்கள். இந்நிலைமையில் இரவும் கழிந்தது. மறு நாள் வஸந்தகுமாரி சக்குபாயின் தைரிய மொழிகளைத் துணையாகக் கொண்டு கிருஷ்ணகுமாரியின் வீட்டிற்குச் செல்வதென்று தீர்மானித்துவிட்டாள்.

தணிகாசலத்தின் பெருந்துணை அவளுக்கு இருப்பதால் சக்குபாயிடம் கூறிவிட்டு கொஞ்சம் பணத்தையும் எடுத்துக்கொண்டு மீண்டும் கிருஷ்ணகுமாரியின் வீட்டிற்குச் சென்றாள். மறுபடியும் வஸந்தகுமாரி இங்கு வந்துவிட்டதைக் காண குழந்தைகளும் கிருஷ்ணகுமாரியும் அடங்காத மகிழ்ச்சி யடைந்தார்கள். கிருஷ்ணவுக்குச் செய்யவேண்டிய சகலமான பணிவிடைகளையும் தானே செய்து வெகு அன்புடன் நடத்தினாள்.

அன்று தான் இவ்விடமே இருந்துவிடுவதென்று தீர்மானித்துக்கொண்டாள். இரைப்பின் உபத்திரவத்தால் தாங்கமாட்டாது கிருஷ்ணகுமாரி தினே தினே மெலிந்துகொண்டே வந்துவிட்டாள். வஸந்தா வந்து 4-5 நாட்களாகியும் இங்குள்ள நிலைமையில் வீட்டிற்குப் போக மனமே வரவில்லை. தணிகாசலத்தை மட்டும் அவ்வப்போது அனுப்பி சக்குபாயின் மூலம் விசாரித்துக்கொண்டு வரப் செய்தாள்.

கிருஷ்ணகுமாரியின் சிச்ருஷையிலும், குழந்தைகளை கவனிப்பதிலும் வேலை சரியாகவிருந்தது. சாந்தமூர்த்தியின் மன வேதனையும் சங்கடமும் நாளைக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. கிருஷ்ணவின் கவலைக் கிடமான தேக நிலைமையில் அவள் பேசக்கூட முடியாது ஈஸிச் சேரில் ஒட்டி உலர்ந்து படுத்திருந்தாள். குழந்தைகள் அவளைச் சுற்றி நின்று "அம்மா! ஏன் ஏதோ போல் திணறுகிருய்...ஏம்மா..." என்று கேட்கும் பரிதாபக் காக்ஷி

அருகில் உட்கார்ந்திருந்த சாந்தமூர்த்தியின் இதயத்தைத் துளைத்து விட்டது.

காதுகளைப் பொத்திக்கொண்டு தலை குனிந்துவிட்டான். குழந்தைக்கு பால் போட்டிக்கொண்டிருந்த வஸந்த குமாரியின் மனத்தை உருக்கிக் கண்ணீரைப் பெருக்கச்செய்துவிட்டது. பாலைப் போட்டிக் குழந்தையைக் கீழே விட்டுவிட்டு கிருஷ்ணகுமாரியிடம் ஓடி அவளை அணைத்தபடியே "கிருஷ்ணு! உனக்கு என்ன செய்கிறது? பெரிய வைத்தியரை அழைத்துவரச் சொல்லட்டுமா!" என்று கண்ணீர் விட்டவாறு கேட்டாள்.

அதே சமயம் கண்ணீர் விட்டுக் கதறியபடியே சக்குபாய் அவ்விடம் ஓடி வந்து, வஸந்தகுமாரியைக் கட்டித் தழுவிக்கொண்டு கலங்கினாள்.

காரணமில்லாது திடீரென்று இவ்வாறு கதறிக்கொண்டு வந்ததைப் பார்த்ததும் வஸந்தகுமாரிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திடுக்கிட்டலறியவாறு "மன்னீ! ஏன் கதறுகிறாய்......என்ன விசேஷம்?" என்று கூறித் திகைத்துப் போய்விட்டாள்.

சக்குபாய் சற்று தேறியவளாய் கிருஷ்ணுவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு பேசமாட்டாது கண்ணீர் விட்டவாறு சிறிது நேரம் கலங்கிவிட்ட பின்னர்......அக்கா!......அக்கா! என்னைக் காப்பாற்றவேண்டும்...... எனக்கு திக்கு வேறில்லை. அடைக்கலம் ......வஸந்தகுமாரியைப் பிடித்துக்கொண்டு "வஸந்தா!......உன் அண்ணனின் கொடிய இதயத்தைப்போல் இவ்வுலகத்திலேயே இராது.

வஸந்தா!...நீ கெட்ட நடத்தையுடன் ஓடிவந்துவிட்டாயாம்: உனக்கு நான் உடந்தையாயிருக்கிறேனும். ஆதலால் இனி அங்கு நான் அரை நாழிகை கூட இருக்கலாகாதாம். என்னுடைய பிறந்த வீட்டிற்கு ஓடிவிடு' என்று அடித்து இம்சித்துக் கழுத்தைப் பிடித்து வீதியில் தள்ளிவிட்டார். நல்ல வேளையாய் தணிகாசலம் வந்தான்.

நான் எங்கே போவேன். எனக்கு திக்கு ஏது, என் பிதா ஒரு மலையாளச்சியுடன் இருக்கையில் அங்கு நான் சென்று அடிமைப்பட என் மனம் இசையவில்லை. ஆதலால் இங்கேயே சரணாகதியடைய வந்துவிட்டேன்...என்னைக் கைவிடாதே' ...என்று கதறினாள்.

இவ்விஷயத்தைக் கேட்ட சாந்தமூர்த்தியின் உள்ளமும் உருகியது. வஸந்தா கண்ணீர் பெருகியபடி "மன்னி! நீ எதற்கும் பயப்படாதே. கடவுள் நம்மை சோதிக்குங் காலம் இது. எத்தனை சோதித்தாலும் அவர் நம்மைக் கைவிடமாட்டார். என் உயிருள்ள மட்டும் உன்னை நான் கைவிடமாட்டேன். காலத்தின் கோலம்" என்று தேற்றியதோடு அவளுடைய மாறுதல்கள் முற்றிலும் கிருஷ்ணகுமாரியிடம் கூறினான்.

சக்குபாயும் இங்கு வந்து சேர்ந்துவிட்டதையறிந்த குலசேகரனுக்குத் தாங்க முடியாத ஆத்திரமும் இன்னும் த்வேஷமும் உண்டாகிவிட்டன. சாந்தமூர்த்திக்கு ஒரு கடிதம் தாறுமாறாக எழுதி விட்டான். அது வருமாறு:

"ஏ சாந்தமூர்த்தி!

18300

எங்கள் குடும்பத்திற்கு நீ செய்த த்ரோகங்களும் படு மோசங்களும் போதாதென்று இன்னும் மனந் துணிந்து வெட்கமின்றி என் மனைவியையும், சகோதரியையும் கள்ளத் தனமாயும் மயக்கியும் நரசோரத்திற்கு ஒப்பாக இழுத்துக் கொண்டுபோய்விட்ட ரகஸியத்தை யாரும் அறியமாட்டார்களென்று நினைக்காதே. இந்த கடிதத்தை ஓர் நோட்டீஸாகக் கொண்டு உடனே அவர்களை யனுப்பிவிட்டால் பிழைத்தாய்; இல்லையேல் உன்னை சந்தி சிரிக்கக் கதறவடிப்பேன். நான் குலசேகரன் என்பது ஞாபகமிருக்கட்டும்."

என்று வரைந்திருந்ததைப் படித்ததும் சாந்தமூர்த்தியின் மனம் தத்தளித்தது; துடித்தது. இக் கடிதத்தின் விபரீதத்தை இவர்களிடம் இச்சமயத்தில் எவ்விதம் சொல்வது? இவர்கள் எல்லாம் ஏன் இங்கு வந்தார்கள்? என் தலைவிதி இன்னும் ஆட்டுவதற்காகத்தான் இவர்களை இழுத்துக்கொண்டு வந்ததுபோலும்"

என்று எண்ணி விசனமே வடிவாய் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டான். க்ருஷ்ணகுமாரியின் நிலைமையும் கவலைக்கிடமாகி விட்டதால் வஸந்தவல்லியும் மனம் பதறிப்போய் எதிர் காலத்தை எண்ணி பயந்து, கிருஷ்ணுவின் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டாள். குழந்தைகளெல்லாம் விவரமறியாவிடினும் அவர்களின் முகத்தில் பரிதாபகரமரன களை சூழ்ந்துகொண்டுவிட்டது. சக்கு பாயும் வேதனைப் பதுமைபோலாகிவிட்டாள்.

---

## 17-வது அதிகாரம்

### அண்ணனின் கோடுமை—அணங்கின் முடிவு

வஸந்தகுமாரி இங்குவந்து சுமார் ஒருமாத காலமாகிவிட்டது. இவ்வொரு மாத காலமாக இங்கு பழகும் முறையில் அவள் சாந்தமூர்த்தியைப் பற்றி நினைத்திருந்ததெல்லாம் மாறி "இப்படியிருக்குமா! குடிகாரன், சோதா என்று கூறியது சுத்த பிசகாகவன்றோ இருக்கிறது. இவனைப்போன்ற யோக்கியனும், குணத்தில் சிறந்த சாந்தஸ்வரூபியும் யாருமில்லை என்று எண்ணும்படியாகவன்றோ இருக்கிறது... இவனைப்பற்றிக் கூறியது முற்றும் குலசேகான் வேண்டுமென்று த்வேஷத்தினுல் கூறிய வார்த்தைகள் என்பது இப்போதல்லவா தெரிகிறது. என்ன சாந்தம்...என்ன பொறுமை"...என்று நினைத்து வருந்துவாள்; சக்குபாயும் அவ்வாறே வியந்தாள்.

அன்று வஸந்தகுமாரி ஏதோ அவசர காரியமாக உள்ளே வந்தாள். சாந்தமூர்த்தி இக்கடிதத்தைப் படித்துவிட்டுக் கலங்கிய வாறு உட்கார்ந்திருந்தான். அதைக் கண்டதும் வஸந்தா "மாமா! என் ஏதோ மாதிரி இருக்கின்றீர்கள்?உடம்புக்கு என்ன?"...என்று கேட்டாள்.

அன்று வரையில் அவன் நேரில் வஸந்தவல்லியுடன் முகத்தைப் பார்த்து பேசவே இல்லை. இனி என்ன செய்ய முடியும்......
"அம்மா!...இதோ இக்கடிதத்தை தயவு செய்து நீயும், உன் மன்னியும் படித்துப் பாருங்கள். என் தலைவிதி என்னை இதுபரியந்தம் ஆட்டியது போதும். இனி எனக்கு வேண்டியதும் நான் விரும்புவதும் என்னுடைய சீக்கிரமான முடிவேயாகும். நான் பட்ட துன்பங்கள் என் ஏழேழு பிறவிக்கும் காணும். இனியாவது அபாண்டமான பழியும் பாவமும் என்னைச் சுற்றி வாட்டாதிருந்தால் போதும்.

என் விதி இதுகாறும் நடத்தியதுபோல் இனியும் நடத்திச் செல்லட்டும். நீங்களிருவரும் தயவு செய்து உங்கள் வீட்டிற்குப் போய்விடுங்கள். நான் மகா பாவி...என் நிழல் பட்டால் உங்களுக்கும் அபவாதமும் இழிவும் உண்டாகும்.'' என்று தலை குனிந்தபடியே கூறினன்.

இவ்வார்த்தைகள் வஸந்தவல்லியின் மனத்தைத் தாக்கின. விவரமறிய கடிதத்தை வெகு ஆவலுடனும் பரபரப்பாயும் படித்துப் பார்த்தாள். அவளுடைய இதயமும் துடி துடித்தது...''ஆஹா... இத்தனை விபரீதத்திற்கும் வந்துவிட்டானு...இருக்கட்டும்...மாமா ...இந்த மிரட்டலுக்கெல்லாம் இனி இந்த பருப்பு வேகாது. நான் இனி சிறு குழந்தையல்ல. எனக்கு மைனரும் சட்டப்படி நீங்கி விட்டது. நான் என்னுடைய சுயேச்சையாக என் சோதரியிடம் இருப்பதற்கு இனி யாருடைய தயவோ, அதிகாரமோ வேண்டாம்.

மாமா...நீங்கள் என்னை கழுத்தைப் பிடித்துத் தள்ளிய போதிலும் நான் என் கிருஷ்ணுவை விட்டுப் போகமாட்டேன். இது சத்தியம்...இதனுல் அப் படுபாவி என்ன செய்தாலும் செய்யட்டும். நான் லக்ஷ்யம் செய்யப்போவதில்லை. உங்களுக்கும் ஒருவிதமான தீமையும் நேராது. நான் இவ்விஷயத்தில் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் எங்களைப் பொருத்த வரையில் கவலையே கொள்ளவேண்டாம்'' என்று உறுதியாயும் ஆத்திரத்துடனும் கூறினுள்.

சாந்த:—அம்மா! நீ சொல்வது ஒருபுறம் நியாயமென்றாலும் உடன் பிறந்த சகோதரியின்மீது நாயை ஏவி கடிக்கச்செய்தவன்—என் காலையே ஒடிக்கச்செய்தவன்—இதுசமயம் ஒருபோதும் சும்மா இருக்கவே மாட்டான். நான் இல்லாத சமயத்தில் என் க்ராமத்து வீட்டில் தீ வைத்த கல் நெஞ்சன் இப்போது நாங்கள் கூண்டோடு கைலாசம் செல்வதற்கும், கூட உங்களையும் ஒழிப்பதற்கும் தீயை மீண்டும் வைத்தாலும் வைத்துவிடுவான். இதில் சந்தேகமே இல்லை. என் பாவத்தின் கொடுமையினால் உனக்குக் கஷ்டம் வேண்டாம். நீ இன்னும் ஆயிரங்காலத்துப் பயிரு......

வஸ:—(இடை மறுத்து) மாமா! நீங்கள் கூறுவதை நான் இப்போது சற்றும் கேட்கவே மாட்டேன். எந்த ஆபத்துக்கள் வரினும் என் சகோதரிக்கு நேருவது எனக்கும் நேரட்டும். நான் போகவே மாட்டேன். அதோ!...கிருஷ்ணா...கூப்பிடுகிறாள். உங்களை அழைத்துச் செல்வதற்காகத்தான் நான் வந்தேன். வாருங்கள்'' என்று கூறியவாறு பறந்துபோய்விட்டாள்.

சாந்தமூர்த்தியும் நொண்டி நொண்டி நடந்தவாறு கிருஷ்ண குமாரியின் விடுதிக்குச் சென்றான். கிருஷ்ணகுமாரியின் தேக பாதை அதிகரித்து ஒருவிதமான பயங்கரத்தை உண்டாக்கிவிட்டதால் வஸந்தா நடுங்குகிறாள். குழந்தைகள் எல்லாம் பரிதாபத்துடன் விழிக்கின்றார்கள் பாவம். இந்த சங்கடத்தை சாந்தமூர்த்தியினால் சகிக்கவே முடியவில்லை. இத்தகைய கஷ்டங்களை யனுபவிக்காமல் தன் ப்ராணன் முதலில் போய்விடாதா என்ற எண்ணமே அவனுக்கு முதன்மையாகத் தோன்றியது.

இதே நிலைமையில் இரண்டு நாட்களும் ஓடி மறைந்துவிட்டன. குலசேகரனின் ஆட்களும், குலசேகரனும் இவ் வீட்டில் புகுந்து சக்குபாயை உதைத்து இம்சித்துத் தாறுமாறாகத் திட்டி, சாந்தமூர்த்தியை நையப் புடைத்து தன் மனைவியையும் சகோதரியையும் வஞ்சமாக அழைத்து வந்துவிட்டதாக நிர்த்தனம் செய்கிறான். வஸந்தகுமாரியையும் திட்டி குலசேகரனே அடித்துவிட்டான்.

வஸந்தகுமாரி வெகு வீரமும் தைரியமும் கொண்டு குலசேகரனை நோக்கி "சீச்சீ துராத்மா! ஆதி காலத்துப் புராண அரக்கர்

களை எல்லாம் நல்லவராக்கிவிட்ட பாதகா! இனிமேல் என்னைப்பற்றி நீ ஏதாவது செய்தால் உன்னைச் சந்தியில் இழுத்துவிடக்கூடிய சாமர்த்தியம் என்னிட மிருக்கிறதென்று நினைத்துக்கொள்ளு. குடித்துவிட்டு தலைகால் தெரியாது ஆடுகிருயா...நான் இனி உனக்கு அடங்கிய பொம்மையல்ல. நான் உன்னுடைய அடிமையல்ல... நான் கடவுளின் அடிமை...மைனர் தீர்ந்து என்னை நான் காத்துக் கொள்ளும் சுதந்திரம் பெற்றவள் என்பது ஞாபகத்தில் இருக் கட்டும். போ வெளியே''...என்று அதட்டினுள்.

சக்குபாயும் "சேச்சே...நானும் என்னமோவென்று ஏமாந்து படுகுழியில் விழுந்துவிட்டது போதும். இனி எனக்கு உலக வாழ்க்கையே வேண்டாம்...உங்களுடைய அக்ரம சகவாச நட்பும் வேண்டாம். கிழவனின் கொலையின் மர்மத்தைப்போல் அந்த கொலையின் மர்மமும் அடங்கிவிடுமென்று எண்ணவேண்டாம். நானே அதை ருஜூப்பித்து உங்களைச் சந்தியில் இழுத்துவிடுவேன். அந்த பெண் இன்னும் இருக்கிருள். சாகவில்லை. பத்திரம்...என்று வீராவேசக் காளிபோல் கூறினுள்.

குடி வெறியிலும் இவனுக்கு அவ் வார்த்தை சற்று பொத்தி யது..." என்ன சொன்னே...என்ன சொன்னே''...என்று சக்கு பாயை பின்னும் நன்ருக உதைத்துத் தள்ளிவிட்டாள். சாந்தமூர்த் தியின் அன்னிலைமையில் அவன் அந்த அடியைத் தாங்காமல் மூர்ச் சையாகி விழுந்துவிட்ட கோரக்காட்சியை சக்குபாயினுலும், வஸந்த குமாரியினுலும் சகிக்கவே முடியவில்லை. வஸந்தகுமாரி சாந்த மூர்த்தியின் முகத்தில் ஜலத்தைத் தெளித்து விசிறி "மாமா!...கண் திறவுங்கள்...இதோ பாருங்கள்'' என்று உபசாரம் செய்தாள்.

அச் சமயம் அகஸ்மாத்தாக சிவப்ரகாசம் வந்தான். அவனைக் கண்டதும் எல்லோருக்கும் வியப்பின்மேல் வியப்பாக ஆய்விட்டது. ப்ரகாசம் சாந்தமூர்த்தியைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தித் தேற்றி "நண்பரே! தங்களையும் தங்கள் குடும்பத்தையும் இவ்வாறு செய்த அப்பாதகன்மீது தாங்களேன் வழக்குத் தொடரலாகாது?'' என்று கேட்டான்.

சாந்தமூர்த்தி கண்ணீர் பெருகியவாறு "ஊம்...என்னுடைய பாழ் பிறவிக்கு வழக்கும் ஒன்று நடத்தி, அவனிடம் அடி வாங்கிய அவமானத்தையும் வெளியிட்டுக்கொள்ள வேண்டுமா? கடவுளின் திருவுள்ளத்தில் என்னை சோதிக்க நினைத்தது இன்னும் பூர்த்தியாகவில்லைபோலும்...அவருக்கும் ஒரு காலம் வராதா! அவருடைய திருவுள்ளமும் உருகாதா! அது என்ன கல்லா, இரும்பா......பசையற்ற கடின பாலைவனமா! அவருக்கே மனமிளகாதுபோனால் அவர் அவ விட்ட வழி நடக்கட்டும்......கிருஷ்ணகுமாரியின் நிலைமையோ அந்திய காலத்தை எதிர்நோக்குகிறது! என் பிழைப்போ நடுக் கடலில் ஊசலாடுகிறது. இந்த அழகில் எனக்கு எதுதான் வேண்டும்?''...என்று மிக்க சலிப்புடனும் ஏதோ ஒருவிதமான வைராக்ய முடிவுடனும் கூறினன்.

சிவப்ரகாசத்திற்கு இந்த ஊரை விட்டுப் போன பிறகு இங்கு நடந்த விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. அவன் தற்செயலாய்த் திரும்பி வந்ததும் விசாரித்ததில் கிருஷ்ணகுமாரியின் ப்ராணன் இன்னுமிருக்கிறது என்று தெரிந்ததும் மனந்தாங்காது ஓடி வந்தான். இங்கு வந்தபிறகே வஸந்தகுமாரியும் சக்குபாயும் இங்கிருப்பதையும் இங்கு நடந்த தடபுடலையுங் கண்டு வியப்பும் விசனமும் அடைந்தான்.

வஸந்தகுமாரி இத்தனை புத்திசாலியாக நடந்துகொண்டது பற்றி மிகவும் மனமகிழ்ந்தான். குலசேகரனைத் தானே முன் நின்று எப்படியாவது பழிக்குப்பழி வாங்கிவிட நினைத்தான். ஆனால் அது வரையில் கடவுள் அங்கு யாருக்கும் அமைதியையோ, அவகாசத்தையோ, சாந்தத்தையோ கொடுக்கவில்லை. அன்று செல்ல மறுநாளே கிருஷ்ணகுமாரி தன்னருமை கைக்குழந்தைகளையும் சகோதரியையும், கணவனையும் விட்டு, இவ்வுலக வாழ்க்கையை நீத்து, சாச்வத நித்திரையிலாழ்ந்துவிட்டாள்.

வஸந்தகுமாரிக்கு வாழ்வாவது மாயமிது மண்ணுவது திண்ணம் என்று தன் தாயார் இறக்குங் காலத்தில் கிழவன் பாடியதும், அக் காலத்து நினைவுகளும் முற்றும் உண்டாகிவிட்டன. கடைசீ காலத்தில் தான் சகோதரியுடன் சந்தோஷமாக இருக்க எண்ணிய

தும் வீணாகிவிட்டதே என்று கதறினாள்; முட்டிக்கொண்டாள்... அவள் தாய் இறந்தபோது தான் அனுபவித்த துக்கத்தை விட ஆயிரம் பங்கு இப்போது அவளுக்கு விசனமும் வயிற்றெரிச்சலும் பொங்கிவிட்டன.

குழந்தைகளின் முகத்தைப் பார்க்கிறாள். வயிற்றைப் பிச்சுகிறது. தன் சகோதரியை மணந்ததற்குப் பலன் படாத பாடும் பட்டு, நொண்டியாயுமாகிப் பரிதவிக்கும் சாந்தமூர்த்தியின் கண்ராவியைக் கண்டு சகிக்க முடியவில்லை. சிவப்ரகாசத்தின் தவிப்போ இதயத்தை உருக்குகிறது. என்ன செய்வாள் பாவம்...நாதியற்ற நிலைமையிலிருக்கும் சக்குபாயின் பரிதாபம் அவளை நிலைகலங்கச் செய்துவிட்டது.

முக்கிய சத்து போய்விட்ட பின்னர் சக்கையாகிய சடலத்திற்கு எத்தனை நாழிகை வாழ்வு...தன் சகோதரனுக்கு செய்தியனுப்பவேண்டாமென்று கூறிவிட்டாள். ஆனால் ப்ரகாசத்தையனுப்பி தணிகாசலத்தின் உதவியால் தகப்பனாரை மட்டும் கூடுமானால் அழைத்து வரச் செய்தாள்...ஆனால் அவருடைய ஆத்திரத்தின் வேகத்தினால் ஆதியில் வைத்த சிறிய நெருப்புப் பொறியின் விபரீத எரிச்சலைக் கண்டறியும் சக்தியும் அற்றுவிட்ட நிலைமையில் அவரால் என்ன செய்ய முடியும்?

பயித்தியம் அதிகமாகிவிட்டதின் வேகத்தால் ஆகாரமும் இன்றி தேகம் மெலிந்து துரும்புபோலாகிவிட்டது. வஸந்தகுமாரி தகப்பனாரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து கிருஷ்ணகுமாரியின் சவத்தைக் காட்டி...ஆத்திரத்தின் பலனைப் பார்த்தீர்களா! ஆத்திரம் செய்த கொடுமையின் விபரீதம் போதுமா! அப்பா! கிருஷ்ணகுமாரி செத்துப்போய்விட்டாளே!'' என்று கதறினாள்.

திருவேங்கடத்திற்கு விவரம் ஒன்றுமே தெரியவில்லை எனினும் அவருடைய வயிற்றில் சித்திரவதை செய்துவிட்டது. திரும்பத் திரும்ப...கிருஷ்ணகுமாரி...பெரெப்பாரு...தேர்தலில் தோல்வியா...மண்டெயெ ஒடெ...ஹிஹி...கிருஷ்ணகுமாரி...ஹிஹி... இவ்விதம் தகவல் இல்லாது அப்போதும் பாழும் தேர்தலும், பதவியும் அதே சித்தத்துடன் பேசினார்...கண்ணில் மட்டும் நீர் தாரை தாரையாக வழிகின்றது. ஒரே அலங்கோலம்...சாந்தமூர்த்தியை அடையாளமே தெரியவில்லை யாதலால் அவனைப் பார்க்கவே இல்லை...

திடீரென்று வெளிவந்தால் என்னவாகுமோ வென்று தகப்பனாரை ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டாள். சவச் சடங்குகள் முடிந்துவிட்டன. இனிமேல் என்ன செய்வது? வஸந்தகுமாரி

குழந்தைகளை எல்லாம் அணைத்துக் கட்டிக்கொண்டு கோவெனக் கதறி புழுபோல் துடிக்கிருள். சாந்தமூர்த்தி உள்ளோடு உள்ளாக புதைந்துவிட்டான். ப்ரகாசம் கிருஷ்ணகுமாரி இதுகாறும் படுத்திருந்து உயிர் துறந்த அதே கட்டிலின்மீது சவத்திற்கு ஒப்பாகப் படுத்துவிட்டான். வீட்டின் அலங்கோலத்தை என்னென்பது? எல்லோரும் அனலிடை மெழுகாக உருகுகின்ருர்கள்.

---

## 18-வது அதிகாரம்

### இதயத் திறப்பு—இன்ப அணைப்பு

இரவு நடு நிசி சமயமிருக்கும். வஸந்தகுமாரியின் இதயம் தத்தளிக்கின்றது. விசனத்தை அவளால் தாங்கவே முடியவில்லை. கிருஷ்ணகுமாரியின் ஈமச் சடங்குகள் முடிந்தும் அன்றே செத்துவிட்டதுபோன்ற விசனம் அவளை வாட்டி வருத்தி உருக்குகின்றது. இத்தனை நாளைவிட அவளுக்கு அன்று கூறத் திறமற்ற தனித்த சங்கடமும் வேதனையும் அவளால் சகிக்க முடியாது செய்கிறது. இதற்குக் காரணம் அவளுக்கே தெரியவில்லை.

திடும் திடும் என்று தூக்கிப் போடுகிறது. திடீர் திடீர் என்று வயிற்றில் ஏதோ சங்கடம் உண்டாகி தலையைக் கிறுகிறு என்று சுற்றுகிறது. "இதுகாறும் அனுபவித்த சங்கடம் போதாதென்று இன்னும் ஏதோ பெரிய ஆபத்து வருவதற்கு இவ்விதம் சித்திரவதை செய்கிறதோ!...ஏன் என் நெஞ்சை ஏதோ அடைக்கிறது! வயிற்றில் எரிச்சலுடன் தாங்கமாட்டாத சங்கடம் செய்கிறது... கடவுளே...இந்த புதிய வேதனையை எதற்காக உண்டாக்கி என்னை சோதிக்கிருய்...

நாங்கள் மூவராகப் பிறந்த பெருமையும், விளையாடிக் களித்த அருமையும் கால கதியால் நேர்ந்த விபரீத மாறுதலும்...அடாடாடா...நினைத்தால் பகீரென்கிறதே....இனி அம் மாதிரி யொரு காலம் வருமா...கிருஷ்ணகுமாரியும் நானும் இணை பிரியாதிருப்போம் என்று எண்ணிக் களித்த நாள் மாறிப் பகையாகிய திரையின் நிழலில் பிரிக்கப்பட்டிருந்ததும் போய் உலகத்தையே விட்டு அவளைப் பிரிந்து பரிதவிக்கவும் காலம் வந்துவிட்டதே......என்ன செய்வேன்...என் என்னை இப்படி கலக்குகிறது. ஏதோ ஆபத்து நேரும்

போல் பயமாயிருக்கிறதே என்று தனக்குள் தவித்தவாறு படுக்கையில் புரண்டாள்.

படுக்கை கொள்ளவில்லை. எழுந்து உட்கார்ந்தாள். ஒவ்வொரு குழந்தையாகத் தடவிப் பார்த்தாள். கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது. குழந்தைகளுக்கு அன்பு நிறைந்த தன் ஆசை முத்தங்களைக் கொடுத்தாள். எழுந்து தன் தகப்பனார் இருக்கும் அறைக்குச் சென்று பார்த்தாள். அவர் வழக்கம்போல் ஏதோ பிதற்றிக்கொண்டிருந்தார்...

சக்குபாயைக் கவனித்தாள். அவள் அப்போதுதான் சற்று கண்ணயர்ந்திருந்தாள். ப்ரகாசத்தின் அறையில் எட்டிப் பார்த்தாள். ப்ரகாசம் தூங்காமல் புலம்பிக்கொண்டிருப்பதையறிந்தாள். சாந்தமூர்த்தியின் அறையில் எட்டிப் பார்த்தாள். கட்டிலின்மீது ஆளைக் காணவில்லை. உள்ளே சென்று பார்த்தாள். எங்கும் காணவில்லை. (எப்போதும் சாந்தமூர்த்திக்கு ஓர் தனித்த விடுதி உண்டு என்றும் அதில் ஏகாந்த வாசமாக இருப்பான் என்றும் நாம் அடிக்கடி சொல்லி இருக்கிறோம்)...அந்த அறையிலிருக்கிறானோவென்று அங்கு சென்றாள்; அது வீட்டின் வெளிப்புற மிருக்கிறது.

அந்த அறையில் யாருமே செல்வது வழக்கம் கிடையாது. வஸந்தகுமாரியும் இது பரியந்தம் சென்றதில்லை. இன்று அவளையறியாது ஏதோ ஓர் மனவேகமும், பீதியும், கலக்கமும் அவளை நிசி என்றும் பாராது அவ்வாறு தள்ளிக்கொண்டு போகிறது. அவன் அறையில் சென்று பார்த்தாள். வழக்கத்திற்கு விரோதமாக அவ்வறை திறந்திருந்ததோடு ஒரு விளக்கும் எரிந்துகொண்டிருந்தது.

எட்டிப் பார்த்தாள். உள்ளே யாருமில்லை. உடனே உள்ளே சென்று பார்த்தாள், அவ் வறை ஓர் நூதனமாயும் வெகு ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியதுமாயு மிருந்தது கண்டு ஏற்கனவே பயங்கரத்துடன் வந்த வஸந்தகுமாரி திகைப் பூண்டை மிதித்தவள் போல நின்றுவிட்டாள். அவ்வறையில் அவள் காணும் காட்சிகள் அவளையே ப்ரமிக்கச் செய்துவிட்டன.

அவ் வறையில் ஒரு மேஜை, ஒரு நாற்காலி, ஒரு சிறிய பெஞ்சு, சித்திரம் எழுதக்கூடிய பலவிதமான கருவிகள் வர்ணங்கள் (ஸ்டாண்டு) ஆஸனங்கள், ப்ரஷ்ஷுகள் முதலிய பலவித சாமான்கள் காணப்பட்டதுடன் ஏற்கனவே எழுதிய பல படங்கள் மேஜையின் மீது ஒரு அடுக்கு இருந்தன சுவரில் மாட்டப்பட்டிருந்த சில படங்கள் அவளை அடியோடு வியப்புக்கடலில் மூழ்கச் செய்துவிட்டன.

அப் படங்களில் அவள் சித்திரக் காட்சியில் கண்ட கிழவனின் அனுயாஸ மரணப்படமும் இருந்தது அவளுடைய வியப்

பிற்கு இன்னும் ஒருபடி அதிக வேகத்தைக் கொடுத்தது...அவைக ளேயே உற்று பார்த்துப் பின் மேஜையின் அருகில் வந்தாள். அங்கு ஒரு கவர்மீது "ஸ்ரீமதி வஸந்தகுமாரி" என்று எழுதியிருந்தது கண்டு அபாரமான ஆச்சரியமும், பரபரப்பும் கொண்டு அக் கவரை உடைத்து உள்ளே இருக்கும் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

"வஸந்தகுமாரீ!

ஒன்று நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும் என்பது என் விஷயத்தில் மிக மிகப் பொருத்தமாகி விட்டது. என் ஜீவிய ரகஸ்யம் என்னைப் படைத்த கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும்.......என் பிறவியே பாழ் பிறவியாகி விட்டது. இனி நான் உலகிலிருக்க சற்றும் லாயக் கற்றவன். உன்னை நான் என்னிதய பூர்வமாய்க் காதலித்தும் அடையும் பாக்யம் செய்ய வில்லை. உன் சகோதரியின் சீர் கெட்டுவிடும் போல் தோன்றிய பயங்கர நிலைமையைச் சீர்திருத்த வந்ததன் பயனாக அவளையே மணக்க நேர்ந்தது. இது தான் என் ஜீவிய ரகஸ்யமாகும். நான் ஜீவகாருண்யத்தை உத்தேசித்து இக்காரியத்தைச் செய்யாதிருப்பின் அப்போதே அவள் கதி அதோகதியாகி வேறு வழியில் மாறிப்போயிருக்கும். இனி இதைப் பற்றிக் கூறு வது அழகல்ல......

இனிமேல் உயிருடன் இருப்பதற்கும் லாயக்கில்லை என் பதையும், நான் உயிருடனிருப்பதே என் குழந்தைகளின் வாழ்க்கைக்கு முட்டுக் கட்டையாகிவிடும் என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டேன். உன் சகோதரியின் சடலம் இருந்த பரியந்தம் இங்கு உனக்கோர் அத்து இருந்தது. இனிமேல் நீ இங்கிருப்பதும் தகாது. உலக நிந்தைக்கும், அபவாதத்திற்கும் ஆளாகிவிடும்படி உன்னை விட நான் விரும்பவில்லை. உன் சகோதரனின் தீமைக்கு எல்லையே இல்லை யாதலால் அவன் மூலமாக நாங்கள் அழிந்து பாழானது போதும் .... என் ஹ்ரு தய ராணி போன்று பாவிக்கும் உன்னை அம்மாதிரி அலங் கோலத்திற்கு விடச் சகிக்கமாட்டேன்......

வஸந்தகுமாரீ! பல விதத்திலும் திக்கற்ற நான் எப்படி பிழைத்து வந்தேன் என்று நீ வியக்கலாம்......உன் அண்ணன் பிரதித்திருந்தபடி நான் சோதா,......அயோக்யன் என்று நீ எண்ணி இருக்கலாம்......என் காலை உடைத்து விட்ட போதி லும் என் [illegible] ‌ எனக்குக் கஞ்சி வார்த்து வருகிறது என்பதை நீயே அறியும் பொருட்டுத் தான் இது காறும் ரகஸ்யமாக வைத்திருந்த என் அந்தரங்க விடுதியைத் திறந்து விட்டேன்.

நான் உயிருடன் இருப்பதால் என் செல்வங்களை நீயும் ஆதரிக்க முடியாது; நானும் திக்கற்ற முடவன் ஆதரிக்க முடி

யாது. அவர்களை நீ ஆரிதப்பதாயிருப்பினும் என் மீதுள்ள த்வேஷத்தினல் உன் அண்ணன், குழந்தைகளையும் கொலை செய்தாலும் செய்து விடுவான்......என் வாழ்க்கையில் நான் கண்ட கண்ராவிகள் போதும்......இனி ஒன்றும் காண நான் விரும்பவில்லை.

வஸந்தகுமாரீ! என்னை நான் மாய்த்துக் கொள்கிறேன்... ஒரு காரியத்திற்கும் உபயோக மில்லாத முடவன் சாவதில் ஒரு நஷ்டமும் இல்லை. என் குழந்தைகள்......என் இன்ப வடிவங்கள்......என் செல்வங்களைக் காப்பாற்று.........கை விடாதே......அவர்களுக்கு நீ தான் கதி...நானும் தொலைந்து விட்டால் உன் அண்ணனின் க்ஷாத்திரமும் தொலைந்து போகும்...பாவம்! பரதேசியாக வந்து விட்ட சக்குவையும் கைவிடாதே...சிவப்ரகாசத்தை நீ மணந்து கொண்டு சுகமே காலங் கழிக்கலாம்.

இது தான் நான் சொல்லும் கடைசீ விஷயமாகும். என்னேடு என்னைப் பிடித்த பீடை தொலையட்டும்...என் குழந்தைகளையாவது கடவுள் சரியாகக் காப்பார் என்று நம்பிக்கையுடன் ப்ராணனை விடத் துணியும் மகாபாவி.

சாந்தமூர்த்தி.''

நான் எழுதியதில் குற்றமிருப்பின் மன்னித்துவிடு......

இதைப் படிக்கும்போதே, அவளை யறியாது செய்த சித்திர வதைக்கு இதுதான் காரணம் போலும்......ஐயோ......இதென்ன கோர முடிவு...ஹா...கடவுளே...என்று கண்ணிர் பெருகியபடியே அக்கடிதத்தை முடிக்கவும் மனமில்லை. பார்க்கவும் ஒடவில்லை...... விஷயம் மட்டும் விளங்கி விட்டதால் கடிதத்தை மேஜைமீது எறிந்து விட்டு தோட்டத்துக்குள் தட்டித் தடுமாறிக் கொண்டு ஓடினள். எங்கு எவ்விதம் அவன் தற்கொலை புரிந்துகொள்ளப் போகிருன் என்று அவளறிவது? மரங்கள் எல்லாம் முட்டுகின்றன. பேய் பிடித்தவள்போல் மாமா....மாமா...ப்ரகாச்...எழுந்து வாருங்கள்...விபத்து...மன்னீ! ஓடிவா...ஓடிவா...என்று கூவிக் கொண்டே ஓடினள்.

இக்குரல் கேட்டு ப்ரகாசமும், சக்குபாயும் விழித்துக் கொண்டார்கள். எங்கே கூச்சல் என்று தெரியாமல் திகைத்து அவர்களும் வீடு முற்றும் பார்த்து விட்டு தோட்டத்தில் ஓட வாரம்பித்தார்கள். வஸந்தகுமாரி ஓடும்போது கீழே ஒரு துணி அவள் காலில் இடறியது கண்டு திடுக்கிட்டு கை விளக்கால் (டார்ச்சு) பார்த்தாள். அங்கேயே சாந்தமூர்த்தியின் நடைக் கட்டைகள் கிடந்தது கண்டு திடுக்கிட்டு சுற்று முற்றும் பார்த்தாள்.

அந்தோ! பயங்கரம்...பயங்கரம்...சாந்தமூர்த்தி ஒரு மரத்தில் கயிற்றினால் சுறுக்கு மாட்டிக் கொண்டு தொங்குவதை நோக்கி கோவென பெரியக் கூச்சலிட்டுக் கதறினாள்...

இதற்குள் ப்ரகாசம், சக்கு, தணிகாசலம்......வேலைக்காரன் எல்லோரும் ஓடி வந்து இந்த விபரீத கோரக் காட்சியைக் கண்டு பதறியவாறு கயிற்றை அறுத்து, சாந்தமூர்த்தியைக் கீழே கிடத்தி சுறுக்கை அவிழ்த்தார்கள்...மூச்சு இருப்பதே தெரியவில்லை.

தணிகாசலத்திற்குச் சாதாரண பச்சிலை மூலிகை வைத்தியங்களில் சில தெரியுமாதலால் அவன் அத் தோட்டத்தில் தேடியலைந்து விளக்கின் ஒளியால் ஒரு மூலிகையைக் கொண்டு வந்து கசக்கி சாந்தமூர்த்தியின் மூக்கில் வைத்து முகரச் செய்தான்...... அரை மணி நேரத்திற்குப் பிறகு மார்பில் சற்று ஓட்ட மிருப்பதையறிந்து பின்னர் அவனைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டில் அவ



னறையிலேயே கிடத்தினார்கள். தணிகாசலம் மூலிகை சிகிச்சையை விடாது செய்தான். சற்று நேரத்திற்குப் பிறகு சாந்தமூர்த்திக்கு ப்ரக்ஞை வந்தது.



அச் சமயம் அவன் ப்ரகாசத்தின் மடியில் படுத்திருப்பதையும், வஸந்தகுமாரி அலங்கோலமாக அவனையே நோக்குவதையும் கண்டு தன்னையே தான் ஒரு மாதிரி பார்த்துக் கொண்டான். "ஊம்......பாவி நான் பிழைத்துக் கொண்டா இருக்கிறேன். ஐயோ! நிம்மதி யுலகத்தில் சஞ்சரிக்க எண்ணினேனே...என் கர்மா இன்னும் முடியவில்லையா?"......என்று தனக்குள் தான் கூறிக்கொண்டே கண்ணை மூடி விட்டான்.

ப்ரகாசம் கண்ணீர் ததும்ப "நண்பரே......தாங்கள் அப்படிக் கூறலாகாது. தங்களுக்கு நிகரில்லாத செல்வரத்தினங்கள் நான்கு இருக்கையில் அவைகளை விட்டுச் செல்வது அக்ரமமல்லவா! இது சற்று கூட தர்மமே யல்ல......அதோ உமது உயிரினுமினிய கண் மணி அழுகிறாள்......தூக்கிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே ஓடினன்.

சாந்தமூர்த்தியின் கண்ணில் நீர் ததும்புகிறது. வாய் பேச முடியவில்லை. மார்பு துடிக்கிறது. வஸந்தகுமாரி சாந்தமூர்த்தியின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு கண்ணில் நீர் வழிய தடு மாறிய குரலுடன்......மாமா!......மாமா! இனிமேல் இப்படிச் செய்வதில்லை என்று எனக்குச் சத்தியம் செய்து கொடும்...இனி நான் சகிக்க மாட்டேன்......நாமிருவரும் புனர் ஜென்மம் எடுத்து விட்டோம்...இனி நான் தங்களுடைய அடிமை......நான் இங்கு வந்த நாள் முதலாக தங்கள் அருமையான குணத்திற்கும், சாந்த ஸ்வ ரூபத்திற்கும் அடிமைப் பட்டு விட்ட ரகஸ்யத்தைக் கடவுள்தான் அறிவார். தாங்கள் இனி என் பொருட்டு உயிர் வாழக் கடமைப் பட்டு விட்டீர்கள். எனக்கு உறுதி கொடுங்கள்......நான் சகிக்க மாட்டேன்...என்று சாந்தமூர்த்தியே திகைத்து வியப்புறும் வண் ணம் அவள் கூறிய வார்த்தைகள் அவன் தேகத்தையே ஆட்டின.

அவன் சற்று ஆவேசம் கொண்டவனைப்போல்...ஹா... என்ன...என்ன...வஸந்தகுமாரி! ... நீ சொல்வது இனி அடுக் காது...அது தர்மமல்ல...நான் நொண்டி—காலில்லா முடவன்... பிறர் பரிகஸிக்கும் நொண்டி என்பதை மறக்காதே......உன் வாழ் நாளை நான் பாழ்படுத்த மாட்டேன்......

வஸந்:—மாமா!...இது விஷயத்தில் முடிவு கூறும் நீதிபதி நீங்க ளல்ல...நான்தான்...என் வாழ்வின் அஸ்திவாரத்தை உறுதிப் படுத் தும் சக்தி என்னுடையது...தங்களுடைய கால் நொண்டி என்பது எனக்குப் பொருளே இல்லை. தங்களைப் போன்ற குணமணியை குணமாணிக்கத்தைப் பதியாக அடையும் பாக்யந்தான் எனக்கு ப்ர தானம்...மாமா...இனி தாங்கள் இந்த பயித்தியக்கார எண்ணத்தை மாற்றவேண்டும்.

ப்ரகாச்:—நண்பரே!...வஸந்தகுமாரியின் உண்மையான புத்தி சாலித்தனத்தை, அவளுடைய ஆத்ம ஜோதியை இப்போதுதான் கண்டேன். வஸந்தா கூறுவது முற்றிலும் உண்மை...அவ்விதம் செய்வதுதான் உலகிற்கு அடுக்கும், குழந்தைகளுக்கும் ஆதரவு கடவுளுக்கும் த்ருப்தியாகும்...அதுதான் நான் எதிர் பார்த்ததும் ஆகும்...நீங்கள் நினைத்துச் செய்தது மிகவும் பிற்போக்கான செய்கையாகும்...

சக்குபாய்:—மாமா!... வஸந்தா இத்தனை புத்திசாலியாக விருப்பாள் என்று நானும் எண்ணவே இல்லை. அவளுடைய திறமை முற்றும் இப்போது காட்டிவிட்டாள். அவளைப்போல் குண விளக்கு இனி உலகில் கிடைக்கமாட்டாள்...மாமா...காலின் ஊனத்தைப் பற்றிப் பார்ப்பது மடமையிலும் மடமையன்றோ . என் வாழ்வே இதற்கு நிதர்சனம் போதாதா...என் மதி கெட்டுவிட்டது....மனிதனின் புத்தியின் ஊனத்தை யறியாது நான் மன்மத வடிவைக் கண்டு மாலையிட்டு என்ன வாரிக்கொண்டேன். என் பிழைப்பின் அவகேடு போதாதா!....அந்த குடும்பத்தினுலேயே சீரழிந்த குடும்பத்திற்கு அவளே விளக் கேற்றுவதுதான் பொருத்தம்...என்று கூறி வஸந்தாவை இறுகத் தழுவிக்கொண்டாள்.

சாந்தமூர்த்தி குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டான். அதற்குமேல்தான் என்ன செய்வதென்று தோன்ருது விழித்தான். அவன் நினைத்து முடிவு கட்டியதொன்று. நடந்துவிட்டதொன்று. வஸந்தகுமாரியை நோக்கினன். அவள் முகத்தில் பரிசுத்தமான ஜோதி ப்ரகாசிப்பதை யறிந்தான். "வஸந்தகுமாரீ!....உன் மனோபாவம் இவ்விதம் மாறும் என்று நான் கனவிலும் கருதவில்லை. உனக்காக இவ் விருவரும் பரிந்து பேசுவதை நான் தடுக்கவும் முடியவில்லை....

வஸந்தா!....ப்ரகாச்....இச் செய்கையை உலகம் நிந்திக்காமலிருக்குமா....மன்மதனும் ரதியும் போன்று வாழவேண்டியவர்களை இவ்விதம் செய்தல் சரியாகுமா?...நீங்களிருவரும் ஜோடியாவதை யன்றோ உலகம் விரும்பும்....என்று இழுத்தாற்போல் சொன்னன்.

ப்ரகாச்:—நண்பரே!....தாங்கள் சொல்வது மிகவும் பிசகு இவ் விதம் பெருந்தன்மையுடனும் பார புத்தியுடனும் வஸந்தா செய்யாதிருப்பின் உலகம் அவளை எவ்விதம் பழிக்கும் என்பதை நீர் நினைக்கவில்லைபோலும். வஸந்தாவை நான் ஸ்வப்பனத்தில்கூட என்னுடன் பிறந்த சகோதரியாகவே நினைத்துவருகிறேன். இது கடவுள்மீது ஆணையாகக் கூறும் வார்த்தையாகும்... வஸந்தாவும் அப்படித்தான் நினைப்பாளென்று நம்புகிறேன்...

வஸந்:—ப்ரகாச்! நீங்கள் சொல்லியது மிக மிக உண்மையானது. குலசேகரனைவிட உங்களை நான் என்றும் என் சகோதரனாக மதித்து வருகிறேன். இனியும் மதிப்பேன்...நான் எடுத்த ஜென்மாவினால் ஏதேனும் ஒரு நற்காரியம் செய்து ஜென்ம சார்த்தக மடைந்தேன் என்று எனது பிறவியில் சந்தோஷப்படும்படியாக இருப்பின் அச் சந்தோஷமும் பலனும் இதுதானாகும். இம் மாதிரி நான் செய்யவில்லை என்றால் என் ஜென்மமே வீணாகியதற் கொப்பானது தான்—என்று அவள் அந்தக்கரண பரிசுத்தமான அன்புடன் கூடிய த்வனியில் ஓர் இன்பநாதமும் அழுத்தமும் ஜ்வலிக்க, கண்ணில் காதலும் கருணையும் ப்ரகாசிக்கக் கூறினாள்.

சாந்தமூர்த்தியை யறியாது அவன் கைகள் வஸந்தகுமாரியின் கைகளைத் தாவிப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டன....இக் காட்சியைக் கண்டு ப்ரகாசமும், சக்குபாயும் ஆநந்த மேலீட்டால் ஸ்தம்பித்தார்கள். வஸந்தாவும் அன்பினால் பிணைக்கப்பட்டு ஆநந்த ரூபியாய் அகமகிழ்ந்தாள். குழந்தைகளையும் சேர்த் தணைத்துக் கொண்டாள்.

## 19-வது அதிகாரம்

### ஞானோதயப் பூரிப்பு—ஆனந்தக் களிப்பு

முக்கியமான மனிதர்களின் முன்னிலையில் அந்த க்ராமத்திலேயே விவாகம் வெகு எளிய முறையில் நடைபெற்ற விவரத்தை குலசேகரன் அறிந்து பின்னும் ஆத்திரங் கொண்டான். ஆனால் அதற்குமேல் ஒன்றும் செய்வதற்கு முடியாத வழியில் அவனிடம் சேர்ந்த சகாக்களின் மூலம் கடனும் உபத்திரவமும் அதிகமாகிவிட்டன. ஊரில் விளைவு இல்லாதுபோனதாலும் சரியாக கவனிப்பவரில்லாமையினாலும் ஒரு மணி நெல்லும் இல்லாது பாழாகிவிட்டது.

சாந்தமூர்த்தி தன் கண்ணினு மினிய காதலியுடன் முன்போல நகர வாஸத்திற்கே வந்துவிட்டான். இவன் கவனிக்கவேண்டிய நகர சபையின் காரியங்கள் முற்றும் தெருத்தெருவாய் சுற்றியும், வீடுவீடாகச் சென்றும் குழாய்த்தண்ணீர் வருகிறதா! சாக்கடைகள் சரியாக ஓடுகிறதா! குப்பைக்காரர்கள் சரியாய் வருகிறார்களா! என்ற விஷயங்களை எல்லாம் வஸந்தா தானே செய்து ஜனங்களிடையே ஓர் புதிய பரபரப்பையும், அபாரமான மதிப்பையும் உண்டாக்கிவிட்டாள். சிறிய குழந்தைகள்முதல் பெரியவர்கள் வரையில் இம்மாதிரி ஒரு பெண்மணி இருப்பாளாவென்று வியந்து போற்றவாரம்பித்தார்கள்.

சாந்தமூர்த்தியின் பாக்யந்தான் இத் தகைய அருமைக் கண்மணி வாய்த்தாள் என்றும், இதுகாறு மிருந்ததைவிட இனிதான் சாந்தமூர்த்தியின் உண்மையான உயரிய குணம் பிரகாசிக்கிறதென்றும் பொது ஜனங்கள் பேச வாரம்பித்தார்கள்.

இச் சமயத்தில் சாந்தமூர்த்தியின் டிவிஷனுக்குப் பக்கத்து டிவிஷன் கவுன்சிலர் இறந்துவிட்டார். அதற்கு மறு தேர்தல் ஆரம்பமாகிவிட்டது. கடுகு சேத்தாலும் காரம் போகாது என்றபடி இத்தனை தோல்விகளும் அமர்க்களங்களும் நடந்திருப்பினும் மீண்டும் இதற்கு குலசேகரனே நின்ருன். அவனுடைய ராக்ஷஸத்தன்மையை அறிந்து பயந்துவிட்ட அனேகர் இதற்கு எதிர்த்து நிற்கவே தியங்கிஞர்கள். அவன் செய்த அக்ரமங்களுக்கு ப்ராயச்சித்தமாக புத்தி புகட்ட எண்ணி அந்த ஸ்தானத்திற்கு வஸந்தகுமாரியே எதிர்த்து நிற்கத் துணிந்துவிட்டாள்.

இந்த துணிபைக் கேட்டுப் பலரும் வியப்புற்ருர்கள். சிலர் "வேண்டாம். அவன் கொடிய அரக்கனுக்கும் கேவலமானவன் விட்டு விடு" என்றும் கூறினர்கள். சாந்தமூர்த்திக்கும் இச்செய்கை மிக மிக பயத்தையே கொடுத்தது. "வஸந்தா! இது நாமே சோதனையை விலைக்கு வாங்குவதாகத் தோன்றுகிறது. நமக்கு இம்மட்டுடன் கடவுள் ஓர் மனச்சாந்தியளிக்கட்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன். இதனுல் என்னென்ன தீமைகள் நேருமோ....... என்ன விபத்துகள் உண்டாகுமோ என்று பயமாயிருக்கிறதே!... இதை விட்டு விடு"...என்று பயந்து கூறினன்.

ஆனுல் வஸந்தா சற்றும் பயப்படவே இல்லை. எது வந்தாலும் வரட்டும். இந்த தேர்தலே அவனுக்கு ஓர் முடிவான புத்தியைப் புகட்டும் தேர்தலாக விருக்க வேண்டும் ....... அதோடாவது அவன் திருந்த வேண்டும்....அவனுக்கு எதிர்த்து யார் நின்ருலும் அவன் ஜெயிக்கப் போவதில்லை. இது நிச்சயம். அவன் செய்த அக்ரம ஜ்வாலை அவனிடம் யாரையும் அணுகவொட்டாது; ஆகையால் நானேதான் எதிர்த்து புத்தி புகட்டுகிறேன். இத்தனை தூரம் அக்ரமம் செய்த மகா கொடும் பாவியான பிறகு இனி அண்ணுவது தம்பியாவது. எல்லாம் வீண்தானுகும்....தயவு செய்து இது விஷயத்தில் கடவுளை நம்பி எனக்கு அனுமதி யளிக்க வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

தேர்தலுக்குத் தானும் நிற்பதாக வெளியிட்ட பிறகே இதைக் கண்ணுற்ற குலசேகரனுக்கு நெருப்பின் மீது நிற்பது போன்ற

எரிச்சலும் ஆத்திரமும் உண்டாகி விட்டன. பல்லைக் கடித்தான், கையை முறுக்குகிருன். தத்தளித்துத் தாண்டவமாடுகிருன்...ஊம்... ....வினச காலம் அவளுக்கும் கிட்டி விட்டதால்தான் என்னையே எதிர்த்து நிற்கும் தைரியம் உண்டாகி விட்டதுபோலும்....இருக்கட்டும் கடைசீ வரையில் ஒரு கை பார்த்து விடுவதே சரி....என்று முடிவு கட்டிக் கொண்டான்.

தன் வீட்டை அடகு வைத்து 10 ஆயிரம் ரூபாய் மார்வாடியிடம் கடன் வாங்கி விட்டான். அது ஒன்றுதான் எஞ்சி நின்றது; அதுவும் போயிற்று....தேர்தல் முழக்கம் தடபுடல் படுகிறது. அண்ணனும் தங்கையும் எதிர்த்து நின்று போட்டி யிடுவது உலகத்திலேயே புதுமையாகத் தோன்றியது. ஜனங்கள் பல மாதிரி பேசிக்கொண்டு குலசேகரனை தூஷிப்போரும், வஸந்தகுமாரியை தூஷிப்போருமாகத்தங்கள் தங்கள் கடமைகளைச் செய்கிருர்கள்.

குலசேகரனைத் தூண்டிவிட்டு "சரியானபடி போட்டி நடத்த வேண்டும்; நடத்தி அந்த சிறுக்கியின் கொழுப்பை யடக்க வேண்டும். விடக்கூடாது.'' என்று தூபம் போட்டு வேடிக்கை பார்க்கும் வீணர்களின் கூட்டமும், இதனுல் வயிறு வளர்க்கும் சோதாக் கூட்டங்களும், சோம்பேறிக் கூட்டங்களும் குலசேகரனுக்குச் சரியாகச் சேர்ந்தன. அவனுக்குத் தலை துள்ளிப் போய் விட்டது.

நாமினேஷனுக்கு முன் தினம் குலசேகரன், வஸந்தகுமாரி வண்டியில் போகும்போது வழி மறித்து நிறுத்தி "அடீ! தடிப் பிணமே! நீ இன்றே விலகிக்கொள்கிருயா அன்றி அழிந்துவிடப் போகிருயா? உனக்குக் கேடுகாலத்திற்குத்தான் இம்மாதிரி காரியம் செய்கிருய். நீ மரியாதையாக விலகிக் கொண்டால் போயிற்று. இல்லையேல் என்ன நேருமென்று சொல்ல முடியாது'' என்று கூறினன்.

இதைக் கேட்டு அலக்ஷியமாக பார்த்துத் துச்சமான குரலில் "ஒச்சி! பேடித்தனமாக வழி மறித்து அதட்டுகிருய்.......நீ என்ன செய்து விட முடியும்......உன்னுல் முடிந்த கஜகர்ணங்களை எல்லாந்

தான் போட்டுப் பார்த்துவிட்டாய். இனி மிச்ச முள்ளது எது? என்னைக் கொலை செய்வது ஒன்றுதானே மிச்சம்........அதையும் வேண்டுமானாலும் நீ செய்து விட எண்ணலாம்....அப்படிச் செய்வதாயிருந்தாலும் நான் நீ சொல்கிறபடி விடப் போவதில்லை. கடவுள் ஒருவர் இருக்கிறார். சீச்சீ ... விலகு .... தணிகாசலம்....வண்டியை விடு''....என்று அதட்டினாள்.

''ஓகோ! இத்தனை அதிகாரமும் மிஞ்சி விட்டதா; பார்த்துக் கொள்கிறேன் ஒரு கை''...என்று குலசேகரன் கூறிவிட்டுப் போய் விட்டான். சென்ற இரு முறைகளில் கை யாண்ட அனியாயத்தை விட அதிகமான அக்ரமங்களை இம்முறை செய்யத் துணிந்து விட்டான். முடிந்தால் வஸந்தகுமாரியைக் கொலை செய்து விடவும் துணிந்து விட்டான் என்றால் இனிமேல் சொல்ல வேண்டியதே இல்லை.

ஆள்களை ஏவி சாந்தமூர்த்தியின் வீட்டின் வாசலில் சட்டியுடன் நரகலைக் கொண்டு கொட்டியும், செருப்புகளை தோரணமாகக் கோர்த்து வாசல்படியில் இரவோடிரவாகக் கட்டச் செய்தும் தாறுமாறுமாகத் திட்டி காகிதங்களைப் போடுவதும் எலக்ட்ரிக்கு ஒயரை அறுத்துவிடச் செய்வதும் ... இதுபோல் பல விஷமத்தனங்கள் செய்வதையே ஓர் ஆதாரமாகக் கொண்டு வஸந்தகுமாரி இவைகளைப் போலீஸாருக்குக் காட்டி ''இம்மாதிரி செய்கிறவர்கள் வீட்டுக்கும் நெருப்பு வைத்தாலும் வைக்கலாம்; அன்றி என்னையே கொலை செய்தாலும் செய்யலாம்....பகை வந்த பிறகு பாசமில்லை. பக்ஷமில்லை. எல்லாம் ஒழிந்து விட்டன. எனக்குச் சரியான பந்தோபஸ்து வேண்டும்'' என்று உதவி கோரினாள்.

தேர்தல் நாளைக்கு முதல் நாளே சாந்தமூர்த்தி வஸந்தகுமாரியையும் குழந்தைகளையும் தன் வீட்டிலிருந்து தன் சினேகித கவுன்ஸிலர் வீட்டில் கொண்டு விட்டு விட்டான். எங்கு பார்த்தாலும் அடிதடி. மோட்டாரை வேண்டுமென்று வஸந்தகுமாரியின் கார் மீது மோதச் செய்து சேதத்தை உண்டாக்குவது. ஓட்டர்களை பய

முறுத்துவது முதலிய பல லீலைகளுக்கிடையே தேர்தல் தினம் முடிந்தது.

அன்று வரையில் குலசேகரனைச் சுற்றிக் கொண்டு உறிஞ்சிய நண்பர்கள் அன்றிரவோடு, விலகிக் கொண்டு தாங்கள் விஷத்தைக் காட்டிவிட்டார்கள். மறு தினம் பகல் 12 மணிக்குள் ஓட்டு எண்ணிக்கை தெரிந்து விட்டது. மொத்தம் பதிவான ஓட்டு 1250 அதில் குலசேகரனுக்கு 65 செல்லுபடியாகாது போனவை 28 ... மிச்சம் வஸந்தகுமாரிக்கு என்று சொல்ல வேண்டுமா? 'சத்தியம் ஜெயித்தது, அசத்தியம் அழிந்தது.' என்று ஜனங்கள் ஆரவாரம் செய்தார்கள்.

65 ஓட்டு வாங்கி டிப்பாசிட்டு தொகையையும் கூடத் தோற்று விட்ட மன அதிர்ச்சியினால் குலசேகரன் இன்னும் என்னென்ன விபத்துக்கள் விளைவிப்பானோ என்று சகலரும் பயந்து நடுங்கினார்கள். அன்பு மயமான தம்பதிகளின் ஒரு மனப்பட்ட பாலுந் தேனும் போன்ற உழைப்பு பொது ஜனங்களின் ஆர்வத்தைத் தூண்டியது இவர்களைப் போற்றுதோர் இல்லை. சாந்தமூர்த்தியின் சந்தோஷம் காணத்திறமே இல்லை. தனக்கும் இத்தகைய ஒரு சுக சூர்யோதயம் ஆகும் என்று அவன் எதிர் பார்க்கவே இல்லை யாதலால் பூரித்துப் புளகிதமடைந்தான் தான் நொண்டியாகி விட்ட கவலையும் அவன் இதயத்தை விட்டு மறைந்து விட்டது என்றே கூறலாம்.

தான் இதுகாறும் ரகஸியமாகச் செய்து க்யாதி யடைந்து வந்த தொழிலை வஸந்தகுமாரி பகிரங்கப் படுத்தி விட்டதால் முன்னிலும் பன் மடங்கு அதிகமான கீர்த்தி அவனைச் சூழ்ந்து விட்டது.

தேர்தலுக்குப் பிறகு ஆறு மாத காலம் ஓடி மறைந்துவிட்டது. குலசேகரன் மிகவும் கேவலமான நிலைமையில் இருப்பதாயும், அவனைக் கடன் வாரண்டுகள் சதா சுற்றுவதாயும், சகல சினேகிதர்களும்

கைவிட்டுவிட்டதாயும் ஒரு தாசி வீட்டிலேயே ஒளிந்துகொண்டிருப்பதாயும் அவளும் இவனைக் காட்டிக்கொடுத்துவிடுவேன் என்று பயமுறுத்துவதாயும் இந்த நிலைமை சகிக்காமல் தற்கொலை புரிந்துகொண்டுவிட்டாலும் விடுவான் என்றும் வஸந்தகுமாரிக்குத் தகவல் தெரிந்தது.

எத்தனை அக்ரமங்களைச் செய்து கொடிய த்வேஷியாகிவிட்டபோதிலும் தன்னையறியாது ஒருவித விசனம் உண்டாகியது. இதைத் தன் கணவனிடம் தெரிவித்தாள். இருவரும் உண்மையில் வருந்திக் கண்ணீரும் உதிர்த்தார்கள். "நாதா! சத்ருவாயினும் சாக மனமில்லை என்பதுபோல் அவன் தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டு பாழாகிவிட்டபோதிலும் இந்த சேற்றிலிருந்து கரையேற்ற முடியுமாவென்று பார்க்கலாமாவென்று தோன்றுகிறது. பாம்புக்குப் பால் வார்த்ததுபோலும், புலிக்கு உபகாரம் செய்ததுபோலும் இதனால் நமக்கே மீண்டும் தீமை செய்ய நினைத்தாலும் பாதகமில்லை. ஒரு கை பார்த்துவிடலாம்........எங்கள் குடும்பத்து கண்ணியம் சீர் குலைந்ததை நினைக்க மனம் பதறுகிறது. அவன் செய்த அக்ரமத்திற்கு, உங்களை செய்த சதிக்கு என் மனம் முறிந்துபோய் நான் எதிரில் நின்று அவனுக்குப் புத்தி வரச் செய்ய வேண்டும்; இதோடாவது திருந்துகிறானா பார்க்கவேண்டுமென்று நான் செய்தேன்...

அவன் எம்மட்டும் ஆடினானோ அம்மட்டும் அடங்கியும் போயிருப்பான். நாம் நேரில் சென்று ஆபத்தில் காத்து உதவலாம்...அவன் திருந்தாவிடின் விதிபோல் நடக்கட்டும்; போய் விடுவோம். உங்களுக்கு என்ன தோன்றுகின்றதோ சொல்லுங்கள்," என்றாள்.

சாந்தமூர்த்திக்கு சந்தோஷம் பொங்கிவிட்டது. உடனே வஸந்தாவைத் தடவிக் கொடுத்து "கண்ணே! உன் வார்த்தைக்கும் யோசனைக்கும் மறுப்போ, வெறுப்போ உண்டா? அசல் தங்கத்திற்கு மாத்தில்லாததுபோல் உன் வார்த்தைக்கும் மாத்தில்லையல்லவா!

அப்படியே செய்வோம்...இப்போதே புறப்படு; போவோம்...... என்றான்.

உடனே இருவரும் சக்குபாயுடன் காரில் புறப்பட்டு தைரியத்துடன் அந்த தாசியின் வீட்டிற்கே சென்றார்கள். அச் சமயம் வாரண்டு சேவகர்கள் இருவர் வீதியில் சுற்றிக்கொண்டிருந் தார்கள் உள்ளே வஸந்தா சக்குபாயுடன் தைரியமாகச் சென்றாள். சாந்தமூர்த்தி வண்டியிலேயே இருந்தான் தாசி இரைச்சலிட்டுக் கத்தியவாறு "இனிமேல் இந்த அவமானத்தை நான் பொறுக்கமாட் டேன். ஐயோ பாவமென்று வீட்டில் சில தினங்கள் மறைய இடங் கொடுத்தால், சற்றும் வெட்கமின்றி இங்கு கிடப்பது சரியில்லை. என் வீட்டு வாசலில் வாரண்டுக்காரன் வந்துவிட்டான். நீ போகிறாயா, "அவனை உள்ளே அழைத்துக் காட்டிக்கொடுத்து விடட்டுமா?" என்று கூத்தாடுகிறாள்.

குலசேகரன் பயித்தியக்காரனிலும் கேடு கெட்ட நிலைமை யடைந்து காண்பதற்குப் பரம விகாரமாக ஆகிவிட்டான். உடல் முற்றும் தெரியும் கந்தலும், அழுக்கும் நிறைந்த சொக்காயும் துணி யும், தாடி மீசைகளின் கோரமும், குச்சிபோல் மெலிந்துவிட்ட விகாரத் தோற்றமும் வஸந்தகுமாரியையும் சக்குபாயையும் இதயம் துடிக்கக் கதறவடித்துவிட்டன.

சக்குபாயின் வயிறு பத்தி எரிகிறது. ஆவேசத்துடன் எதிரில் சென்று "சீச்சீ....காசுக்காக மோசம் செய்யும் தாசியே தூரப்போ! நாதா!...நாதா! .. இனியாவது புத்தி வந்ததா! இன்னும் வரவில்லையா! உலகானுபவம் போதுமா! ஐயோ! உங்களைப் பார்க்க என் வயிறு பத்தி எரிகிறதே! இதயம் வெடித்துவிடும்போல் இருக்கிறதே"....... என்று அவன் காலைப் பிடித்துக்கொண்டு கதறுகிறாள். வஸந்த குமாரி அவனை நோக்கி" அண்ணா!....இப்போது நீ புனர்ஜென்மம் எடுத்திருப்பாய் என்று எண்ணுகிறேன். உன்னிலைமை என் னுயிரையே ஆட்டிக் கிளப்பிவிடும்போலிருக்கிறது. போனது போகட்டும் இனி உன் பழங்கதைகளை அடியோடு மறந்துவிடு. என்னோடு முதலில் வீட்டிற்கு வா!....பின்னர் எல்லாம் பேசிக்கொள்

வோம்...சத்தியம் அழியாது என்பதை இனியாவது நம்பு....என் கணவரும் நீ உடைத்த நொண்டி காலுடன் வீதியில் வந்திருக்கிறார். அவர் பெயரை அவர் நிலைநாட்டி விட்டார்....எழுந்திரு'' என்று கூறி, அவன் கையைப் பிடித்துத் தூக்கினாள்.

குலசேகரன் இந்த திடீரென்று உண்டாகிய சம்பவத்தினால் கதிகலங்கிவிட்டான். ஒன்றுமே பேசவோ பார்க்கவோ முடியாது மயக்கம் வந்துவிட்டது. கண்ணை மூடிவிட்டான். வஸந்தாவும் சக்குபாயும் அவனை மெல்லத் தூக்கிக்கொண்டு வந்து காரில் விட்டு வாரண்டுக்காரர்களுக்குத் தாங்கள் பதில் சொல்வதாகக் கூறி விட்டு வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

வீட்டில் அவனைப் படுக்கையில் படுக்கச் செய்து இருவரும் உபசரித்தார்கள்.

அவன் வாயைத் திறக்கவோ, பேசவோ இல்லாது மிகவும் மவுனமாகவே இருந்தான். நிச்சப்தமாக இரவு முற்றும் நிம்மதியாகத் தூங்கட்டும் என்று விட்டார்கள். நடு நிசியில் சக்குபாயும் வஸந்தாவும் கட்டிலினருகில் சென்று பார்த்துத் திடுக்கிட்டார்கள். அங்கு ஆளைக் காணவில்லை படுக்கையின்மீது ஒரு கடிதம் மட்டும் இருந்தது, கண்டு வியப்பும், துக்கமும், ஆத்திரமும் அடைந்து எடுத்துப் பார்த்தார்கள்.

"கம்ஸன் அடி பணிந்தானா! ராவணன் அடிமையானானா! துர்யோதனன் இணங்கி வந்தானா...ஆனால் குற்றமறிந்தார்கள். ....கடைசியில் போருடன் சாகத் துணிந்தார்களேயன்றி வாழத் துணியவில்லை. இனி நான் நம் மனிதர்களின் முகத்தில் விழிக்க ப்ரியப்படவில்லை. அடிமை வாழ்க்கை வாழ விரும்பவில்லை. பாம்பு கிழமாகி விடினும் விஷம் குறையாது. என் சக்தி ஒடுங்கிவிடினும் இனி உங்கள் முன்பு வாழச் சற்றும் இசைய மாட்டேன். கடவுள் ஒருவர் இருப்பதை இப்போதே அறிந்தேன். இனி என் முடிவு அவன் கையிலிருக்கிறதை நம்பிவிட்டேன். என்னைப்பற்றித் தேடவேண்டாம். உங்களைக் கடவுள் காப்பாராக...

குலசேகரன்.''

இதைப் படித்ததும் மனமுடைந்துவிட்டது. உடனே வீடு முற்றும் தேடினார்கள். ஒன்றும் பயனில்லை.

*　　*　　*　　*　　*

மேற்குறித்த சம்பவத்திற்குப் பிறகு மூன்று வருடங்களாகி விட்டன. சக்குபாய் பெரிய சன்னியாசினியாய் விரக்திக் கொழுந்தாகிவிட்டாள். அவளும் ப்ரகாசமும் நெருப்புத் தணல்கள்போல் ஜ்வலித்தவாறு கிராமத்துக்குச் சென்று ஒவ்வொருவர் ஒவ்வொரு கிராமத்தைப் புனர் உத்தாரணம் செய்யும் தீவிர வேலையில் இறங்கி விட்டார்கள். அதிக கீர்த்தியுடனும் உபயோகத்துடனும் க்ராமத்து வேலைகள் நடந்துவருவதைக் கண்டு எல்லோரும் வியந்து போற்றினார்கள்.

மன மொருமித்த அன்யோன்ய தம்பதிகளின் இணையற்ற இன்ப இல்வாழ்க்கையின் இனிப்பைக் கூறவேண்டுமா! தேசத்திற்கு உழைக்கவே தேக மெடுத்தது போல் தங்கள் தங்கள் டிவிஷனுக்கு நிகரில்லாத சேவைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். நம் கதை ஆரம்பித்து இப்போது வருடங்கள் பல ஆகிவிட்டபோதிலும் வஸந்தகுமாரிக்கு அன்றைய சம்பவத்தை ஞாபக மூட்டும் முறையில் தீபாவளி ஒளியும், பட்டாசு முதலிய வாணங்களின் பேரொலியும் ஆகாயத்தையளாவின.

கிருஷ்ணகுமாரியின் குழந்தைகளும், வஸந்தகுமாரியின் குழந்தையும் ஒன்று கூடி பாணங்களை வெகு ஆநந்தமாகச் சுடும் காட்சியைக் காணும்போது வஸந்தகுமாரியின் கண்களில் நீர்த்துளிகள் உதிர்ந்தன. ஆநந்தமும் ஒரு புறம் எழுந்து நின்றது. வஸந்தகுமாரியின் காதலன் குழந்தைகளையும் வஸந்தாவையும் நோக்கினான். இன்பதுன்பங்கள் அவனையும் சூழ்ந்து கொண்டன. வஸந்தாவின் கண்ணீரைத் தானே துடைத்து "ப்ரியே!...எல்லாம் ஈசனின் செயல்....அன்றைய தீபாவளியையும், அன்று நடந்த மற்ற சம்பவங்களையும் மறக்கவே முடியாது. ஏதோ கடவுளின் கருணையினால் வந்த விபத்துக்கள் எல்லாம் நீங்கி இக்குழந்தைகளுடன் இவ்வரு

டம் ஆநந்தமாக மகிழும்படி அருள் பாலித்ததே நாம் செய்த பெரும் பாக்யம்....உன் பிதாவுக்கும் சற்று தெளிவு உண்டாகி குழந்தைகளுடன் விளையாடுவது இன்னும் பேரானந்தமாகும் எத் தனையோ கணக்கற்ற அக்ரமத்தைச் செய்து தூர்த்தனுகிவிட்ட உன் சகோதரன் புத்தி திரும்பி, தான் செய்த சதிகளுக்கு ப்ராயச் சித்தமாய் சேரியில் ஹரிஜன வேலை செய்து வருகிருன் என்றதை நேற்று பத்திரிகையில் பார்த்தது இன்னும் அபரிமிதமான சந்தோ ஷம். இந்த சந்தோஷத்தைக் குலைத்துச் சோதியாமல் கடவுள் இப்படி என்றும் வைத்திருக்கும்படி அவனடி சிந்தித்து வேண்டுகி றேன். பொது ஜன சேவை செய்து இன்புறுவதும், இக் குழந்தைக ளுடன் மனமகிழ விளையாடுவதும், பகவானை பஜிப்பதுந்தான் நமக்கு நித்யகல்யாண வைபோகமாகும். அதோ பாரு; லதாவும், சின்னு வும் சிரிக்கிருர்கள்.'' என்ருன். காதலன் உரையில் களிப்பெய்தி மது குடித்த வண்டுபோல் வஸந்தா ஆநந்தப் பரவசத்துடன் அவன் கைகளில் சாய்ந்தாள். இதை விட ஆநந்தம் வேறு என்ன வேண்டும்?

போங்கும் மங்களம் எங்கும் தங்குக

1. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை
2. இன்னு செய்தாரை யொறுத்த லவர் நாண
நன்னயஞ் செய்து விடல்

—திருக்குறள்.

சுபம்! சுபம் !! சுபம் !!!

சாந்தகுமாரி
முற்றிற்று

ஓம் தத் ஸத்.

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

# ரொக்கப் பரிசு ரூ. 225.

முதல் பரிசு (சரியான விடைக்கு) ரூ. 200
முதலில் வரும் சரியான விடைக்கு ரூ. 10
அதிகமான ரூபாயுடன் விடைகள் அனுப்புபவருக்கு ரூ. 10
ஸ்பெஷல் பரிசு ரூ. 5

ரூ. 2-0-0, க்கு ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம்
பிரவேசக் கட்டணம் அணா 4. முடிவு தேதி 7—4—37

| | | |
|---|---|---|
| 1 | —டு | ஓர் மிருகம் |
| 2 | கள்—ன் | திருடன் |
| 3 | — — —கம் | யுகங்களில் ஒன்று |
| 4 | ஈ—ல் | கொடுத்தல் |
| 5 | கொ—பு | கிளை |
| 6 | வள—தல் | வளர்ச்சி |
| 7 | — —தி | ஓர் மரம் |
| 8 | அதிப— | அரசன் |
| 9 | சிவ— | கடவுள் |

ரூ 2-0-0 க்கு பூரா விடைகள் அனுப்புபவர்கள் அடியில் கண்ட உதாரணப்படி பாக்கி 8 வார்த்தைகளுக்கும் தாங்கள் கண்டு பிடித்த விடைகளை ஒவ்வொரு வார்த்தைக்கும் நேராக வரிசைக் கிரமமாக எழுத வேண்டும். 1. ஆடு, மாடு யாடு, என்பவைபோல்.

இப் போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும்.

மானேஜர்
"கடவுள் நிலயம்"
வேதாரணியம் (தஞ்சாவூர் ஜில்லா)

## பரிசுகளின் விவரம்

1937 ஹூ மார்ச் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 5 | S. 990. | Mr. N. Sabapathy, Sebak Bernam, |
| 2 | 5 | T. 107. | „ T. R. Thiruvengadam Pillai, Mylapore. |

ஏப்ரல் மாதம் 20ந் தேதிக்குள் சந்தாவை அனுப்புவோரது நம்பர்களையும், புதிய சந்தா சேர்த்துக்கொடுப்போரது நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 2 சீட்டுகளை எடுத்து, ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 மதிப்புள்ள புத்தகங்கள் இனாமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்.

ஓர் நற் செய்தி

## பம்பாய் வாசிகளுக்கு!

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்களும், "ஜகன்மோகினி" நாவல் பத்திரிகையும் கீழ்க்கண்ட எமது ஏஜண்டுகளிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

Messrs. D. CHARI & Co.,
11. Bhimciwala Building,
MATUNGA (BOMBAY 19.)

## மலாய் நாட்டு வாசிகளுக்கு!

நமது ஏஜண்டு ஸ்ரீமான் P. சிவகுரு, 108. பிரிக்பீல்ஸ் ரோட் கோலாலம்பூர், மலாய் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள அன்பர்களின் சௌகரியத்தைக் கருதி, எல்லா பத்திரிகை விற்போரிடமும் 'ஜகன்மோகினி'யும், ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய இதர நாவல்களும் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

## பர்மா நேயர்களுக்கு!

"ஜகன்மோகினி" யும், நமது இதர நாவல்களும் அடியிற் கண்ட ஏஜண்டுகளிடம் எப்பொழுதும் கிடைக்கும்

புவன கதா புத்தகசாலை,
நெ. 229. பேயர் வீதி, கல்கத்தா ரோடு
ரயில்வே ப்ளாக். ரங்கூன்.

---

உங்களுக்குத் தெரியுமா? உடனே எழுதி தருவியுங்கள்.

# திருக்குறள்

மூலம், தெளிபொருள் பொழிப்புரை,
ஆங்கில மொழிபெயர்ப்புடன்

விலை. ரூ. 2-8-0 தான், முன்பணம் அனுப்புவோர்க்குத் தபால் செலவு இனாம்.

A. R. முதலியார் c/o "ஜெகன்மோகினி" திருவல்லிக்கேணி.

---

## ADVERTISEMENT RATES

Rs. 12 for full page Rs. 6-8 for half page
Rs. 15 „ „ „ Inner wrapper Rs. 3-8 „ quarter page

SPECIAL RATES FOR CONTRACT ADVERTISMENTS
"JAGANMOHINI" OFFICE.,
*Triplicane, Madras,*

# புது வருஷம் பிறந்துவிட்டது!

# புது நாவல் வெளி வந்துவிட்டது!!

# ...லோருக்கும் நல்ல நாள்தான்!!!

| | | |
|---|---|---|
| யாவரும் | இப்பொழு...நாக்குவதென்ன? | — கிராமம் |
| சர்க்கார் | நினைப்பதென்ன? | — கிராமம் |
| ராஷ்டிரபதி | கூறுவதென்ன? | — கிராமம் |
| ராஜாஜி | கருத்திலிருப்பதென்ன? | — கிராமம் |
| மகாத்மா | கிரியாம்சையில் காட்டுவதென்ன? | — கிராமம் |
| தேர்தலில் | காங்கிரஸிற்கு ஜயமளித்ததென்ன? | — கிராமம் |

ஆதலின்

கிராமத்தைப் பற்றி

நீங்களும் அறிந்து கொள்ள வேண்டாமா?

சுதந்திரம் கிடைப்பதற்கு வழியென்ன?

## கிராமத் தொண்டு

ஸ்ரீமான். எம். வி. ஸ்ரீநிவாஸன், **M. A., B. L.,**

எழுதிய

# "மந்தாகினி" யை

உடனே வாங்கி வாசியுங்கள். பிரகாஷைப்போல் கிராமப்பணியே தெய்வப்பணி என்று நீங்களும் — உழைக்க முற்படுவீர்கள். —

**விலை அணு 8 தான்.** **தபால் செலவு $1\frac{1}{4}$ அணு.**

குறிப்பு: "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்குத் தபால் செலவு இனும்.

**முன்பணமனுப்பவும். வி. பி. கிடையாது**

## வத்ஸா கம்பெனி,

**திருவல்லிக்கேணி.**

நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?

# அனாதைப்பெ…

அல்…

## கனிந்த காதலர்

அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும், இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்று உயரிய படக்காட்சிக்குகந்த சிறந்த நாவல்.

விலை ரூ. 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

## அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?......

விலை அணா. நான்கு

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின் பரிபவம்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனாமாக நாவல்கள் வேண்டுமா? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனைவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனா | ஒன்று இனாம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம். |

18304

“ஜகன்மோகினி ஆபீஸ்” திருவல்லிக்கேணி

நாவலர் போற்றும் நான்காவது வாரம்

கோவை

பிரிமியர் ஸினிடோன் லிமிடெட்டில்

தயாரித்த

முதல் தமிழ் பேசும் படம்

# சதி அனுசூயா

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் | 4வது வாரம் | |
| மதுரை | 4 ,, | |
| காரைக்குடி | 3 ,, | |
| காரைக்கால் | 3 ,, | |
| சேலம் | 1 ,, | |
| சித்தூர் | 1 ,, | |
| பழனி | 2 ,, | |

*For Bookings :—*

**Manorama Films,**
Avanashi Road,
Coimbatore.

எமது அடுத்த படங்கள்.

1. **ஸ்ரீ கந்த லீலா** (தயாராகிறது)
2. **கள்வர் தலைவன்** (M. K. ராதா, T. S. பாலையா, M. V. மணி நடிப்பார்கள்)

*For particulars apply to :*

M. A. S. CHELLAM & Co.,
The Premier Cinetone Ltd.,
Coimbatore.

நீங்கள் இன் னும் படிக்கவில்லையா?

# அனாதைப்பெ

அல்

## கனிந்த காதலர்

அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும், இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்று உயரிய படக்காட்சிக்குகந்த சிறந்த நாவல்.

விலை ரூ. 1/4. சந்தா நேயர்களுக்கு ரூ. 1.

## அன்பின் சிகரம்

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?......

விலை அணா. நான்கு

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின் பரிபவம்<br>பிச்சைக்காரக் குடும்பம் | இனாமாக நாவல்கள் வேண்டுமா? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின் கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனா | ஒன்று இனாம் | மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம். |

18300

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி

நாவலர் போற்றும் நான்காவது வாரம்

கோவை

பிரிமியர் ஸினிடோன் லிமிடெட்டில்

தயாரித்த

முதல் தமிழ் பேசும் படம்

# சதி அனுசூயா

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | 4வது வாரம் |
| மதுரை | 4 ,, |
| காரைக்குடி | 3 ,, |
| காரைக்கால் | 3 ,, |
| சேலம் | 1 ,, |
| சித்தூர் | 1 ,, |
| பழனி | 2 ,, |

*For Bookings :—*

**Manorama Films,**
Avanashi Road,
Coimbatore.

எமது அடுத்த படங்கள்.

1. ஸ்ரீ கந்த லீலா (தயாராகிறது)
2. கள்வர் தலைவன் (M. K. ராதா, T. S. பாலையா, M. V. மணி நடிப்பார்கள்)

*For particulars apply to :*

**M. A. S. CHELLAM & CO.,**
The Premier Cinetone Ltd.,
Coimbatore.



## வலிகள்

## சுளுக்குகள்

# Strains

அனாவசியமாக வலியினால் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து வலியைச் சமனப்படுத்துவதைக் கவனியுங்கள்.



சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவும் இல்லை.

# அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சோஸ்தப்படுத்தும்.